கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி ௨௨.] ரக்தாக்ஷி௵ ஆவணி௴ [பகுதி ௧௦.
Vol. XXII. August-September-1924. No. 10.

மதங்கசூளாமணி.

(௩௪௪-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

எடுத்துக்காட்டியல்.

௧. மதங்கசூளாமணியாகிய செகசிற்பியார், இற்றைக்கு முந்நூற்றறுபது வருடங்களுக்குமுன்னே (கி. பி. 1564), ஆங்கில நாட்டின் நடுப்பாகத்திலுள்ள ஸ்ரிரற்போர்ட்-ஒண்-அவோண் (Stratford-on-Avon) என்னும் நகரத்திலே உற்பவித்தார். இவர்தந்தையார்பெயர் ஜோண் ஷேக்ஸ்பியர் என்பது. அக்காலத்தில் ஆங்கிலநாட்டிற் செங்கோலோச்சிய அரசியின்பெயர் எலிசபேத் ராணி யென்பது. எலிசபேத் ராணியின்காலத்தில் ஆங்கிலநாட்டிற் செல்வமுங் கல்வியும் பெரிதும் விருத்தியெய்தின. செகசிற்பியார் தமது இருபத்தேழாம்வயதுமுதல் நூலியற்றிவந்தாரெனவும் ஐம்பத்துமூன்றாம்வயதில் உலகவாழ்வை யொருவினாரெனவும் அறிகின்றோம். இப்புலவர்கோமகன் முதன்முதலெழுதிய நாடகம் காதல் கைம்மிக்க காவலன்சரிதை (Love's Labour's Lost) யென ஆராய்ச்சியாளர் கூறுவர். செகசிற்பியார் இயற்றிய மொத்தநூல்களின் றொகை நாற்பத்தைந்து என்ப. இவற்றினுள் ஒருசில பிற்காலத்தார் இவர் பெயரால் இயற்றிய நூல்களென ஒருசாரார் கூறுவர். அவையனைத்தினையும் ஆராயப்புகின், ஆராய்ச்சி பல்கி வரம்பிலுட்படாது இகந்துவிடுமென அஞ்சி, நகைச்சுவையுணர்த்தும் காதல் கைம்மிக்க காவலன்சரிதை (Love's Labour's Lost) என்னும் ஒன்றும், அவலமும் இளிவரலு முணர்த்தும் ஆதுலராஜன்சரிதை

(King Lear) என்னும் ஒன்றும், அவலமும் உவகையு முணர்த்தும் இரம்மியன் சுசீலை சரிதை (Romeo and Juliet) என்னும் ஒன்றும், அவலமும் வெருளியும் உணர்த்தும் தீநட்பஞ்சிய தீமோன்சரிதை (Timon of Athens) என்னும் ஒன்றும், மருட்கையு முவகையுமுணர்த்தும் பெரும்புயற்சரிதை (The Tempest) என்னும் ஒன்றும், அச்சமுணர்த்தும் மகபதிசரிதை (Macbeth) என்னும் ஒன்றும், பெருமிதமுணர்த்தும் வணிகதேயவர்த்தகன்சரிதை (The Merchant of Venice), யூலியசீசர்சரிதை (Julius Caesar) என்னும் இரண்டும், வெருளியுணர்த்தும் சேனுதிபதிசரிதை (Titus Andronicus) என்னும் ஒன்றும், உவகையுணர்த்தும் வேனிற்காதை (As You Like It) கூதிர்க்காதை (The Winter's Tale) என இரண்டும், உவகையு நகையுமுணர்த்தும் கருதியது எய்திய காதலர்சரிதை (Twelfth Night or What You Will) என்னும் ஒன்றும் ஆகிய பன்னிரண்டு நாடகங்களையும் ஆராய்தற் கெடுத்துக்கொண்டாம். இவற்றை ஒரு சுவை, இருசுவையோடு சார்த்திக்கூறினமையின் இவை பிறசுவை பெருவோவெனின், அங்ஙனமன்று, பெருவாவிற்றுகிய சுவையொடு சார்த்திக்கூறினும்; இவை பிறசுவையும் நிறைந்துவருவன வென்பது.

கவிச்சுவை நிறைந்தபாகங்களை இயன்றவரை செய்யுளுருவமாக மொழிபெயர்த்துத் தருவாம். வேண்டியவிடத்துச் செகசிற்பியார் வழங்கிய ஊர்ப்பெயர், மக்கட்பெயர், தெய்வப்பெயரென் றின்னவற்றைத் தமிழ்மொழிமரபுக்கியைய, வேற்றுமைப்படுத்தி வழங்குவாம். இருமொழிவழக்கையும் நிரனிறுத்துக்காட்டும் ஓர் அட்டவணையை வியாசமுடிவிற் றருவாம். இனி நிறுத்தமுறையே காதல் கைம்மிக்க காவலன் சரிதையை யாராயப்புகுவாம். நாடகத்துக்கு இன்றியமையாச் சிறப்பினதாகிய சந்தியென்னும் உறுப்பு இச்சரிதையினுள் இன்னவாறு அமைந்துநின்றது என்பதைக் காட்டும்பொருட்டுச் சந்தியின் உட்பிரிவாகிய காட்சிகள் ஒவ்வொன்றினது சாரத்தையும் தனித்தனியாகத் தருவாம். வடநூலார் நாடகத்தின் பெரும்பிரிவை அங்கமென வழங்குவார். தமிழில் நாடகமெழுதினோர் அங்கத்தின் உட்பிரிவைக் காட்சியென வழங்கினர். யாமும் அவ்வழக்கைத் தழுவுவாம்.

I முகம்.

முதற்காட்சி :—சாவகதேசத்தாசனுகிய பிரியதத்தமன்னன் தனது உயிர்த்தோழராகிய வீரன், இலாவணன் சோமகன் என்னும் மூவரையும் விளித்துப் பின்வருமாறு கூறுகிருன்.

அரசனுரை : வாரீர்நண்பரே! "தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார், தோன்றலிற் றோன்றுமை நன்று" என்றபடி இவ்வுலகி லுதித்த யாம் புகழினைத் தேடவேண்டும். காலமென்னுங் கழுகானது நம் வாழ்நாளை உண்டு தொலைத்துவிட, மரணம் என்னும் இளிவரல் வந்தெய்துமன்றே? அங்ஙனம் வந்தெய்துதற்கு முன்னமே மாருத புகழினைச் சம்பாதிக்கவேண்டும். பூதவுடம்பு கழிந்தபின்பும் நமது புகழுடம்பு எக்காலத்தும் நிலைபெற்றிருத்தல்வேண்டும். ஆதலால், ஆசையென்னு மிருட்சேனையை யடர்ந்தெதிர்ந்து வெல்லவேண்டும். தன்னைத் தான் வென்ற வீரனிலும் பார்க்கப் பெரியவீரன் ஒருவன் உளனே? அத்தகைய வீரராகிய என்நண்பரீர்! நீவிர் மூன்ருண்டுக்கு என்னேடு வாழவேண்டும்; யாம் நால்வரும் சிற்றின்பங்களனைத்தினையும் வெறுத்துக் கல்வியே கருத்தாக இரவு பகல் சிந்தைவேறறுக் கல்வியில் முழுகியிருத்தல்வேண்டும். நமது அரமனை யொரு கல்விநிலையமாதல்வேண்டும். சாவகநாடு கண்டோருங் கேட்டோரும் அதிசயிக்கும் கல்விக்களஞ்சியமாதல்வேண்டும். நாம் எவ்விதமாக வாழவேண்டும் என்பதைப்பற்றி விரிவாக ஒரு பத்திர மெழுதி வைத்திருக்கிறேன்; அப்பத்திரத்தில் எனது நண்பராகிய நீவிர் கைச்சாத்திடல்வேண்டும்.

இங்ஙனம் அரசன் கூற இலாவணனும் சோமகனும் உடன்பட்டுக் கைச்சாத்திட்டனர். வீரன் பத்திரத்தைவாசித்துப்,பெண்களைக் கண்ணினுலும் பார்த்தல்கூடாது என்ற வாக்கியம் ஆங்கு எழுதப்பட்டிருப்பதைப் பார்த்து, அரசனைநோக்கி, "அரசே! நாககாட்டரசன்புதல்வி தோழியர்மூவரோடும் பிற பரிசனர்களோடும் இங்கு வந்திருக்கிருள்; அரசிளங்குமரியை வரவேற்று உபசரிப்பது தேவரீருடைய கடமையாயிற்று; ஆதலால் இந்தக்கட்டளைபைத் தலைவராகிய தேவரீரே மீறி நடக்கப்போகின்றீர்" என்ருன்.

அரசனுரை. ஆம், ஆம். இவ்விஷயத்தைப்பற்றி நான் பராமுகமாயிருந்துவிட்டேன். அரசிளங்குமரியை வரவேற்றல் அவசியமான காரியமே; ஆதலால் இந்த ஒருசட்டத்தை மீறிநடக்கத்தான் வேண்டும்.

வீரனுரை. அரசே! அவசியமேற்படும்போது சட்டத்தை மீறிநடப்பது சத்தியத்துக்குவிரோதமில்லையென்பதை நேரிற் கண்டுகொண்டேன்; கைச்சாத்திடுகிறேன்; இந்த மூன்றுவருஷத்துக்குள்ளே மூவாயிரம் அவசியம் ஏற்படுதல்கூடும்.

அரசனுரை. அன்பரீர்! நமதுபொழுது சந்தோஷமாகக்கழியும் என்பதற்குச் சந்தேகமில்லை. பலதேசங்களிலும் யாத்திரைசெய்து அநுபவமடைந்த அதிசூரன் என்னும் அறிஞனொருவன் நமது ஓய்வுநேரங்களில் நமக்கு நல்விஷயங்களைக்கூறி உவகையளிப்பான்.

[இத்தருணத்தில் மட்டி யென்னும் ஒருசேவகன் இருளப்பனென்னும் ஒரு நாட்டுப்புறத்தானையிட்டுக்கொண்டு ராஜசமுகத்துக்குவந்து அரசனை நமஸ்கரித்து ஒரு பத்திரத்தை யளித்தான்.]

அப்பத்திரத்தின் சாரம் வருமாறு :—

"என்னுயிர்க்குத் தெய்வமே! என் உடலைக்காக்கும் எஜமானே! ஏகசக்கிராதிபதியாகச் சாவகமுற்றையும் காப்பாற்றிவரும் பெருந்தகாய்! பறவை குடம்பையடையும் மாலைப்பொழுதில் எனதுஉடலினுற்ற சிரமத்தைநீக்கும்பொருட்டு உவவனத்துக்கு உலாவச்சென்றிருந்தேன். அங்கு நான்கண்ட அருவருப்புக்குரிய செய்தியை யென்னென்றெடுத்துரைப்பேன். கீழ்மகனாகிய இருளப்பன் தேவரீருடைய கட்டளைக்கு மாறாக ஒருபெண்பாலோடு வார்த்தையாடிக்கொண்டிருந்தான். அவனைப் பிடித்துத் தேவரீருடைய சமுகத்துக்கு அனுப்புகிறேன். பெண்பாலின் பெயர் காஞ்சனை; தேவரீருடைய கட்டளைபிறக்கும்வரையும் அவளை என்னிடத்தில் நிறுத்திவைத்திருக்கிறேன்".

இங்ஙனம்,

மாறாவடிமைபூண்ட ஊழியன்,

அதிசூரன்.

அரசன் வழக்கை விசாரித்து இருளப்பன் உப்புக்கஞ்சியுணவோடு ஒருவாரஞ் சிறைச்சாலையிலிருக்கவேண்டுமென்று தீர்ப்பிட்டான்.

இரண்டாம்காட்சி:—அதிசூரன் விட்டில் என்னும் சிறுவனேடு வார்த்தையாடிக்கொண்டிருக்கிறன்.

[இச்சம்பாஷணையில் எள்ளலும் இளமையும்பற்றிய நகைச்சுவை தோன்றுகிறது; விரிவஞ்சி மொழிபெயர்க்காது விடுகின்றும்.]

இத்தருணத்தில் மட்டியும், இருளப்பனும், காஞ்சனையும் வருகிறர்கள். அதிசூரன் காஞ்சனையைநோக்கிச் சோலையிலுள்ள ஒரு வீட்டினைக் காட்டி, "அதோபார்; உனது சிறைவீடு; நீ அங்குப் போயிரு; நானே அவ்விடம் வந்து உன்னைத் தண்டிக்கிறேன்" என்று சொல்லுகிறன். அனைவரும் போயினபின்னர் அதிசூரன் தனியேயிருந்து மன்மதபாணத்தின் வலிமையைப்பற்றித் தன்னுள்ளேயாலோசிக்கிறன்.

[இதனேடு முதற்சந்தியாகிய முகம் முடிகின்றது.]

II. பிரதிமுகம்.

முதற்காட்சி:—நாகநாட்டு ராஜகுமாரியும், அவளது தோழியராகிய சாலினி, மாலினி, கத்துரு என்னும் நாககன்னியரும் அபயனென்னும் நாகநாட்டு மந்திரியும் தோற்றுகின்றனர். சாவகதேசத்தரசன் கைக்கொண்டிருக்கிற மூன்றுவருடவிரதத்தைப்பற்றியும் அரசனது தோழராகிய வீர லாவண சோமகரைப்பற்றியும் நாககன்னியர் தம்முள்ளே பலவாறக வார்த்தைபாடுகின்றனர், அரசன் தனது விருந்தினராகிய நாககன்னியருக்கு நகர்க்குப்புறத்தே விடுதியேற்படுத்தியிருப்பதாக அபயன் சொல்லுகிறன்.

[இத்தருணத்தில் அரசனும் மூன்றுதோழரும் பரிசனரும் வருகின்றனர்.]

இராஜகுமாரியை அரமனைக்கு அழைப்பது விரதபங்கமாகுமேயென்னும் எண்ணம் ஒருபக்கம் இழுக்க, நகர்ப்புறத்தே விட்டுச்செல்வது மரபாகாதேயென்னும் எண்ணம் மற்றொருபக்கம் இழுக்க அரசன் செய்வதென்னவென்றறியாது தியங்குகின்றன். ராஜகுமாரியின்

எண்ணம் மெல்லமெல்லப் பிரியதத்தமன்னனுடைய உள்ளத்தைப் பற்றுகிறது. வீரன் சாவினியை முன்பு கண்டறிந்தவன்; தன்னை மறந்து அவளோடு பலவாருக வார்த்தையாடுகின்ருன்.

சோமகன்: (அபயனைநோக்கி) ஐய! ஒருவார்த்தை; அதோநிற்கும் இளம்பெண்ணின்பெய ரென்ன?

அபயன்: அவள் எம்மூர்ப் பிரபு ஒருவரது புதல்வி; பெயர் கத்துருவாகும்.

இலாவணன்: (அபயனைநோக்கி) ஐய! ஒருவார்த்தை; தூய வெள்ளை வஸ்திரந்தரித்துக்கொண்டு அதோ தோன்றும் நல்லாள் யாரோ?

அபயன்: அவள் ஒருபெண்.

இலாவணன்: அவள் பெயரை விரும்புகிறேன்.

அபயன்: அவளுக்கு உள்ளது ஒருபெயர். அதனை நீர் விரும்புவது வெட்கமாகும்.

இலாவணன்: அவள் யாருடையபுதல்வியென்று தெரிவிப்பீரையா.

அபயன்: அவளை ஈன்ருளது புதல்வியென்று அறிந்துகொள்வீராக.

இலாவணன்: நரைமுதிர்ந்த நுமது தாடியை இறைவன் என்றுங் காப்பாற்றுவாராக.

அபயன்: ஐய! கோபித்துக்கொள்ளாதீர்; அம்மடவரல் நர்கநாட்டுப் பாற்குனபுரத்துமன்னன்புதல்வி.

இலாவணன்: அவள் அழகிலும் நற்குணங்களிலும் மிகச்சிறந்தவள்.

அபயன்: இருக்கலாம்.

[அரசனும் தோழர் பரிசனர்களும் போய்விடுகின்றனர்.]

அபயன் இராஜகுமாரியைநோக்கிச் சாவகதேசத்துமன்னன் அவள் மீது அடங்காக்காதல்கொண்டிருப்பதாகவும், தான் அதனைக் குறிப்பினுல் உணர்ந்துகொண்டதாகவும் கூறுகிருன்.

[இதனேடு இரண்டாஞ்சந்தியாகிய பிரதிமுகம் முடிகின்றது. மூன்ருஞ்சந்தியாகிய கருப்பத்தினதுசாரத்தைக் கூறுவதற்குமுன் முதலிரண்டுசந்திகளினது அமைப்பைப்பற்றிச் சிலகுறிப்புக்கள் கூறுவாம். முகமும் பிரதிமுகமும் முறையே முளையும் நாற்றும் போல்வன வென உறுப்பியலினுட் கூறினும். முளைத்து நாற்றுவதற்கு ஒரு

வித்து வேண்டுமே, அவ்வித்து எதுவோவென்னின், நாடகக்கருதிய பொருளே அவ்வித்தாமென்பது. "காண லாவதோர் உருவமெய்க் காரிகையைக் கண்டாற்—பூணு வார்மயல் காளையர்" என்பது நாம் எடுத்துக் கொண்ட நாடகத்துக்குரிய வித்து. முதற்சந்தியாகிய முனேயினுள்ளே அரசனது பிரமசரியநோக்கமும் அதன் பொருந்தாமையும், பொருந்தாச் சட்டத்தைப் பிறப்பித்தோர் தாமே யதற்கு மாறுகொள்வா ரென்னு முண்மையும், பிறர்பாற் குற்றங் காண்போர் அதிசூரனைப்போலத் தாமும் அக்குற்றத்துக்கு உட்படுவாரென்பதும், அரசனது விரத பங்கத்துக்குக் காரணம் நெருங்கிவிட்டது என்னுங் குறிப்புங் காட்டப் பட்டது. பிரதிமுகத்தினுள்ளே நாகநாட்டு இராஜகுமாரியினது வருகையும், அரசனது உள்ளம் அவள்பாற் சென்றமையும், அரசனது தோழர் மூவரும் இராஜகுமாரியினது தோழியர்மூவரையும் காதலித்து நின்றமையும் கூறப்பட்டதாதலின் முதற்சந்தியினுள்ளெழுந்த முளே நாற்றாகிமுடிந்ததன்மையது இரண்டாஞ்சந்தியாகிய பிரதிமுகமென்று அறிகின்றோம்.]

III. கருப்பம்.

நகர்ப்புறத்தேயிருந்த பூஞ்சோலையின் ஒருபக்கத்திலே அதிசூரனும் விட்டிலும் தோற்றுகின்றனர். அதிசூரன் தனது மனம் காதலால் அலேவுற்றிருப்பதைப் பற்றிச் சிலவார்த்தைகள் கூறியபின், விட்டிலே நோக்கிச் சிறைச்சாலேயிலிருக்கும் இருளப்பனே அழைத்துவரும்படி கட்டளேயிடுகிறான். விட்டில் இருளப்பனேயழைத்துவர அதிசூரன் இருளப்பனேநோக்கித் தான் அவனது சிறையை நீக்கிவிடுவதாகவும் தான் கொடுக்கும் ஒருகடிதத்தைக் காஞ்சனேயிடத்துக் கொடுத்துவிட வேண்டுமென்பதாகவுஞ் சொல்லுகிறான். இருளப்பன் அதற்குச் சம்மதித்துக் கடிதத்தைப்பெற்றுக்கொண்டு புறத்தே போகும்போது அரசனதுதோழருளொருவனுகிய வீரனேச் சந்திக்கிறான்.

வீரன்: (இருளப்பனேநோக்கி)

"மாலேவர் தடையு முன்னர் மன்னவன் மகளோ டிந்தச்
சோலேயுட் பூக்கள் கொய்யத் தோழியர் மூவர் சார்வார்
சாலினி யென்னு நீர்மை தரித்தமெல் லியல்பா லிந்த
ஓலேயைக் கொடுத்து மீள்த லுன்பெருங் கடமை கண்டாய்!"

ஏடா! இருளப்பா! நாகநாட்டரசன்புதல்வியும் தோழியரும் மாலைக் காலம்வருவதற்குமுன்னர் இச்சோலைக்குப் பூக்கள்கொய்யவருவார். அவருள்ளே ஒரு மெல்லியல் உளள்; இன்மொழிநாவோர் அவள்பெயரை உரைக்குங்காற் சாலினியெனக்கூறுவார்; அன்னளது செவ்வியகரத்திலே இக்கடிதத்தைக் கொடுத்துவிடுவாயாக; இதோ இப்பணத்தை யெடுத்துக் கொள்.

[இருளப்பன் போனபின் வீரன் தனதுவிரதத்தைப்பற்றியும் அதனை நிலைகுலைக்க முற்பட்ட சாலினியைப்பற்றியும் தன்னுள்ளே யெண்ணி நெடுமூச்செறிகின்றன்; இதனோடு மூன்றாஞ்சந்தியாகிய கருப்பம் முடிகின்றது. அதிசூரனும் வீரனும் கொடுத்த கடிதங்களை இருளப்பன் மாறிக்கொடுத்துவிடுவதையும் அதனால் நேர்ந்த விளைவினையும் நான்காஞ்சந்தியாகிய விளைவினுட் காணலாகும்]

(தொடரும்.)

விபுலாநந்தர்.

சரமகவி.

வெண்பா.

1. தொக்ககொல்ல மாயிரத்துத் தொண்ணூற்றொன்பதினிற்
பக்கமதி ஆடியிரு பான்மூன்றில்—மிக்ககுரு
வாரமதில் நள்ளிரவில் மாமூல மன்னவனித்
தாரணியின் வாழ்வுநீத் தான்.

2. திருமால் திருவடிபோய்ச் சேர்ந்துதிரு மூலப்
பெருமான் பெரும்பேறு பெற்றான்—உருமேவு
விண்மழை போல வியன்வஞ்சி மாதழுத
கண்மழை வெள்ளங் கடந்து.

3. பொய்யுடலைக் கொண்டு புகழுடலைக் கண்டஞ்சி
வையகம்விட் டோடும் மறலியே—ஐயமறக்
கற்றுத் தெளிந்த கவிவாணர் சொல்வீர
வெற்றியுனக் குண்டோ விளம்பு.

திருவநந்தைவாசன்.

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

(௬௰உ-ம் பக்கத்தொடர்ச்சி.)

181. பொய்த்தலை மருங்குலாள் ஒருத்தி, புல்லிய
கைத்தலம் நீக்கிலள்; கருத்தில் நீக்கினள்:
சித்திரம் போன்ற அச் செயல் ஓர் தோன்றற்குச்
சத்திரம் மார்பிடைத் தைத்த தொத்ததே.

இ-ள். ஒருத்தி, தன்னைத் தழுவிய தலைவனது கைகளைத் தள்ள வில்லை; மனத்துள் அவனை ஏற்றுக்கொள்ளவுமில்லை: (தன்னை அடைந்தாரை வெறுத்துத் தள்ளுதலும் விரும்பிக் கொள்ளுதலும் செய்யாத) சித்திரம் போன்ற அவள் செயல், அவனுக்கு நெஞ்சில் வேல்பாய்ந்தது போன்றது.

பொய்த்து அலை மருங்குலாள்-பொய்யாகி (இருந்தும் இல்லாததென்றுசொல்லும்படி சிறியதாய்த் துவளுகின்ற இடையினையுடையாள். கைத்தலம்-கை. தோன்றல்-தலைவன். சத்திரம்-வேலாயுதம்.

[ஒருத்தி தன் பிரிய சகியை ஆலிங்கனஞ்செய்துகொண்டு, அன்பு பாராட்டி "என் நாயகன் பால் தூதுபோ" என்று சொல்ல உன்னுவாள்; நாணத்தாற் சொல்லமாட்டாள்: திரும்பவும் சொல்லஉன்னுவாள்; திரும்பவும் நாணத்தாற் சொல்லமாட்டாள்; இவ்வாறு பல முறை பயனின்றி முயன்று நெடுநேரம் தோழியைத் தழுவியபடியே நின்று விம்மிக் கொண்டிருந்தாள்.]

182. உருத் தெரி தன்மைய உயிரும் ஒன்று தாம்
அருத்தியும் அத் துணை ஆய நீரினர்
ஒருத்தியும் ஒருத்தனும் உடம்பும் ஒன்றெனப்
பொருத்துவ ராம் எனப் புல்லினர் அரோ.

இ-ள். (காதலனும் காதலியுமாகிய ஒருவனுக்கும் ஒருத்திக்கும்) உருவம் தோன்றும் தன்மையுடைய உயிர் ஒன்று; அன்பும் ஒன்று: அப்படிப்பட்ட தன்மையுடையார் (ஆன அந்த) ஒருவனும் ஒருத்தியும்

உடம்பும் ஒன்றேயென்னும்படி (மெழுகுப் பாவை யிரண்டை ஒன்ருக) இணைப்பார்போலத் தம் உடல்கள் ஒன்றி ஐக்கமாகத் தழுவினுர்கள்.

உரு தெரி தன்மைய-உருவம் (கண்ணுக்குத்) தெரியும் தன்மையை உடைய. அருத்தி-அன்பு. அத் துணை-(ஒன்று என்ற) அந்த அளவு. ஆய-அப்படிப்பட்ட. 'ஆயவன்' அப்படிப்பட்டவன் என்ற பொருள் பட, "ஆயவன் ஒரு பகல் அயனை யேநிகர்" (திருஅவதாரப்படலம். க) என்பதில் வருதல் காண்க. ஆம், அரோ அசைகள்.

'தாம்' என்பதைப் பகுதிப்பொருள்விகுதியாகக்கொண்டு கடவுள் வாழ்த்தில் 'உலகம் யாவையும் தாம் உள' என்பதை 'உலகம் யாவை தாமும் உள' எனக் கூட்டியதுபோல, 'உயிரும் ஒன்று தாம்' என்பதை '(இருவர்) உயிர்(கள்) தாமும் ஒன்று' எனக் கூட்டுக.

அச்சிடப்பட்டிருக்கிற பாலகாண்டப் பிரதிகள் ஒன்றில், உயிர் கண்ணுக்குப் புலப்படாத தன்மையதாதலாலோ, வேறு காரணத்தாலோ, 'உருத் தெரி தன்மைய உயிர்'என்றபாடம் தள்ளப்பட்டுக் 'கருத்தொரு தன்மையதுயிர்' என்றபாடம், மோனையின்றி யிருந்தும் கொள்ளப்பட்டிருக்கிறது. முந்திய பாடம், மோனையுடைமைபற்றியும் பின்வரும் விளக்கம்பற்றியும் இத்திரட்டில் எடுத்தாளப்பட்டது. அவ்விளக்கம் வருமாறு:—

மற்றையோர்க்குப் போலன்றிக் காதலர்க்கு அவர் உயிர் அவரால் காதலிக்கப்பட்டார் உருவமாகத் தோன்றுமென்பதுபற்றி இங்கே காதலராகிய ஒருத்தனுக்கும் ஒருத்திக்கும் 'உருத் தெரி தன்மைய உயிர்' என்ருர். ஒரு காதலன் தன் காதலியின்தோற்றத்தைத் தன் உயிரின் தோற்றமாகக் கொண்டு கூறியதாக வேறொரு கவி பாடிய பின்வரும் பாட்டினை நோக்குக.

"காணு மரபிற் றுயிரென மொழிவோர்,
நாணிலர் மன்ற, பொய்ம்மொழிக் தனரே:
யாஅங்கண் டெம்மே அரும்பெற லுயிரே;
சொல்லும், ஆடும், மென்மெல இயலும்,
கணைக்கால் நுணுகிய நுசுப்பின்
மழைக்கண் மாதர்ப் பணைப்பெரும் தோட்டே".

(மன்ற-நிச்சயமாக. தோட்டு-தோளையுடையது.)

காதலனுக்குக் காதலியாகிய உயிரும் காதலிக்குக் காதலனாகிய உயிரும் ஒன்றுக்கொன்று ஏற்றத்தாழ்வில்லாமல் இன்பம் பயத்தலில் ஒன்றுபோன் றிருத்தல்பற்றி 'உயிர் ஒன்று' என்றார். அவர்கள் ஒத்த அன்பினராதல் குறிக்க 'அருத்தி ஒன்று' என்றார்.

[நெடுங்காலம் பிரிந்திருந்த காதல ரிருவர், சந்திக்கச் சமயம் கிட்டிய போது, உடல்கள் (மெழுகுப் பாவைகள்போல) ஒட்டும்படி இறுகத் தழுவினர்கள்; ஒட்டிய உடல்களை அவசத்தாற் பிரிக்க அறியாராய் நெடும்பொழுது பிரியாராயினர்.

ஒரு காதலன் தன் காதலியை மார்பு அழுந்தத் தழுவ, அவள் அவனை எதிர் தழுவியபோது, அவள் கைகள் அவன் முதுகை அணைத்தது, அவள் தனங்கள் அவன் மார்பை உருவி முதுகுப்புறத்து வெளிப்பட்டனவோவென்று தொட்டுப்பார்த்ததுபோன்றது.

காமாவேசங்கொண்ட ஒரு மாது தன் காதலன்பால் தோழியைத் தூதுவிட்டவள், விடும்போது அவள்பாற் சொல்லிய தின்னதென்று நினைவுகூர்தற் கியலாதவாறு அவளோடு அறிவையும் போக்கினள்].

183. மறப்பிலள் கொழுநனை, வரவு நோக்குவாள்,
பிறப்பினொ டிறப்பெனப் பெயரும் சிந்தையாள்,
துறப்பரும் முகிலிடைத் தோன்றும் மின் எனப்
புறப்படும், புகும், ஒரு பூத்த கொம்பனாள்.

இ-ள். (ஆபரணங்கள் அணிந்து) பூத்த கொம்புபோன்ற ஒருமாது, தன்நாயகனை (ஒருபொழுதும்) மறவாதவள், அவன் வரவை (ஒவ்வொரு கணமும்) எதிர்பார்ப்பவள், (ஓர் உயிர்க்குப்) பிறப்பும் இறப்பும் (மாறி மாறி வருதல்) போல் (ஒருகால் வருவானென்ற எண்ணமும் ஒருகால் வாரானென்ற எண்ணமும் மாறி மாறி வர) நிலைமாறும் மனத்தினள்,— மேகத்தினின்று தோன்றும் மின் (அடுத்தடுத்து வெளிப்படலும் மறைதலும்) போல (ப் பலமுறை கூடாரத்தினின்று நாயகன் வருவானென்று வரவேற்க) வெளியேவருவாளும் (வாரானென்று) உள்ளே போவாளு மாயினள்.

பெயரும் - நிலைபெயரும் - நிலைமாறும். துறப்பு அருமுகில் - (மின்னுக்கு உறைவிடமாகியிதனால் அதற்கு) நீங்குதற்கரிய மேகம்; (மழை

பெய்து பிராணுதாரமாதலால் உலகத்தார்) வெறுத்துவிடக்கூடாத மேகம்.

மின் பெண்ணுக்கும், மின் தோன்றல் மறைதல் பெண் வெளியே வரல் உள்ளேபோதலுக்கும் உவமானம். உவமானமாகிய மேகத்தைக் கூறி உவமேயமாகிய கூடாரத்தைக் கூறாது உய்த்துணரவைத்தார். இவ் வுவமான வுவமேயங்களின் பொருத்தம் நினையுந்தோறும் மிக்க மகிழ்ச்சி விளைப்பதாயுள்ளது. மைந்தரும் மாதரும் கூடாரத்துறைதல் சந்திரசைலப்படலம் கஎ, கஅ-ல் கூறப்பட்டது.

இப்பாட்டு "வருவார் கொழுந ரெனத்திறந்தும் வாரார் கொழுந ரென அடைத்தும்—திருகும் குடுமி விடியளவும் தேயும் கபாடம் திறமினோ" என்னும் கலிங்கத்துப்பரணிப்பாட்டை நினைவுறுத்து கின்றது.

[ஒரு மாது, தன் கொழுநன் தன்பால் அன்புபாராட்டும்போது, தன்னை இளையாள் பெயரால் விளிக்க, அவளிடத்திலும் தன்னிடத்து அதிக அன்புடையான்போல அவன் நடித்த கரவு வெளிப்படக்கண்டு சிரித்தாள்; அதே சமயத்தில் தன்னைக் குறைவாக நேசித்தானென்று கண்ணீர் பெருக்கினாள்].

184. கொள்ளைப்போர் வாட்க ணாள் அங் கொருத்தி,ஓர் குமரன் அன்னான்
வள்ளற்றார் அகலம் தன்னை மலர்க்கையாற் புதைப்ப, நோக்கி,
"உள்ளத்தார் உயிர் அன் னாள் மேல் உதைபடு மென்று நீ நின்
கள்ளத்தாற் புதைத்தி" என்னா முன்னையிற் கனன்று மிக்காள்

இ - ள். ஒருத்தி, (ஊடற் காலத்தில் கோபித்து உதைக்கப்போம் போது) அவள் நாயகன் (அவனுடைய பொன்னாலும் மணிகளாலும் அமைந்த) மாலை அணிந்த மார்பை (அம் மாலைகள் பட்டு அவள் பாதங் கள் வருந்துமென்று) கைகளினாற் பொத்தக்கண்டு, "உன் உள்ளத்துள் ளே உறைகின்ற உன் உயிரை ஒத்தவள்மேல் உதைபடுமென்று உனக் குள்ள கள்ளத்தனத்தினால் மூடுகின்றாய்" என்று முன்னிலும் அதிக மாகக் கோபித்தாள்.

கொள்ளை - மிகுதி. குமரன் - முருகன். வள் - வலி (புறப்பொருள் வெண்பாமாலை). 'தொடை', 'தொடையல்' இரண்டும் மாலையைக் குறித்

தல்போல, 'வள்', 'வள்ளல்' இரண்டும் ஒருபொருள் குறித்தன்போலும். அப்படியாயின், 'வள்ளல்தார்' என்பதற்கு வன்மையான (மணிகளாலும் பொன்னாலும் அமைந்த) மாலையென்று பொருள்கொள்ளலாம். 'வள்ளல்' என்பது "வள்ளற்சேக்கைக் கரியவன்" (மிதிலைக் காட்சிப்படலம் கசக) என முன்னும் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது. 'வள்ளத்தார்' என்ற பாடங்கொண்டு 'வள்ளம்' 'வளம்' ஆயதெனலும் உண்டு.

[முற்பிறப்பிலே அறத்தை முற்றுப்பெறச் செய்யாதவர்கள் இப்பிறப்பிலே "கருவிலே திருவுடையவர்" ஆகிப் பெற்ற பிறவிச்செல்வம் அவர் இறக்குமளவும் குறைவின்றி நில்லாது இடையிலே குன்றி விடுதல்போலச் சந்திரன் உதயமாகும்போது உடன் தோன்றிய ஒளி இடையிலே (அத்தமிக்குமுன்) மழுங்கும்படி உதயகாலம்வர, திருமாலின் கரிய பெரிய திருமார்பில் விளங்கும் சிவந்த கவுத்துவரத்தினம் போல, கரும் பெருங் கடலிலே செஞ்ஞாயிறு உதயமாயிற்று.]

எதிர்கோட்படலம்.

(சனகர் தசரதரை எதிர்கொண்டு வரவேற்றதைக் கூறுவது).

[தசரதர் சேனாசமுத்திரத்துடன் கங்காநதியை அடைந்தார்].

185. கப்புடை நாவின் நாகர் உலகமும் கண்ணிற் றோன்றத்,
துப்புடை மணலிற் றாகிக், கங்கை நீர் சுருங்கிக் காட்ட,
அப்புடை அநீக வேலை அகன் புனல் முகந்து மாந்த,
உப்புடைக் கடலும் தெள்நீர் உண் நசை உற்ற தன்றே.

இ-ள். கங்கையாறு (நீர் குறைந்து) நாகலோகமும் கண்ணுக்குப் புலப்பட, (முன்பு நீரினால் மறைக்கப்பட்டிருந்த) மணல் (வெளிப்பட்டுத் தோன்றுதல் உடையதாகிச் சுருங்கியதாய்த் தோன்றும்படி அதன் நீரைப் படைக்கடல் முகந்துண்டதனால் (அந்நீர் தன்பால் மிகுதியாக வந்துகொண்டிருந்ததை உண்டுகொண்டு தாகம் தவிர்ந்திருந்த) லவணசமுத்திரம் நீருண்ணும் விருப்பம் மிகுந்தது.

கப்பு - பிளவு. நாவின் - நாவினையுடைய. துப்பு உடை - தூய்மையுடைய. மணலிற்று—மணலையுடையது. அப்பு உடை—அம்பினை உடைய. 'அம்பு', 'அப்பு' ஆக விகாரப்பட்டது. அனீகம் - சேனை. வேலை - கடல். அகன்புனல் - விரிநீர். நசை - விருப்பு.

[தசரதர் மிதிலையை அணுகியபோது, சந்திரன் சூரியனை யெதிர் கொண்டாற்போல, சந்திரகுலச் சனகர் சூரியகுலத்தசரதரை வரவேற்கப் புறப்பட்டார்.]

தசரதர் சேனை (பாற்கடலொழிய) மற்றெல்லாக்கடல்களும் ஒருங்கு திரண்டுவந்தாற்போல்வர, அதனைத் திருமகளைப்பெற்ற பாற்கடல் சந்தித்ததுபோல, சீதாதேவியைப்பெற்ற மிதிலா நகர ஜனசமூகம் சந்தித்தது.

தசரதர்சேனையைச் சனகர்சேனை கூடிய ஆரவாரம் கடலில் ஆறு சங்கமிக்கும் ஓசையை ஒத்தது.

தம் சேனையைப் பின் நிற்கச்செய்து, சனகர், தேரில்வந்து தசரதர் தேர் முன் இறங்க, அவர்தம் தேரில் ஏறுகவெனக் கைகாட்ட, ஏறினார். ஏறினவரை அகமும் முகமும் மலரத் தசரதர் தழுவினார். பின் இருவரும் மிதிலைநோக்கிச் சென்றார்கள்.

இராமலக்குமணர் மிதிலையினின்று புறப்பட்டுப் பிதாவை யெதிர் கொள்ளவந்தார்கள். முன் பிரிந்த உயிர் திரும்பி வந்து சேர்ந்தாற்போல, இராமர் தசரதரை அடைந்து வணங்கத் தசரதர் அவரை ஆலிங்கனஞ் செய்தார். இலக்குமணர் இறைஞ்ச அவரையும் தழுவினார். இருவரும் தாய்மாரையும் தொழுதார்கள்.

இராமர் தசரதரை வணங்கியதுபோலப் பரதர் இராமரையும், இலக்குமணர் பரதரையும், சத்துருக்கர் இராமலக்குமண ரிருவரையும் பணிந்தார்கள்.

தம்பியர் குதிரைமேல் இருபக்கமும் வர, இராமர் தேர்மீதுசெல்ல, எல்லாரும் மிதிலையை அடைந்தார்கள்.

186. பஞ்சி சூழ் மெல் அடிப் பாவைமார் பண்ணை சூழ்
மஞ்சு சூழ் நெடிய மா ளிகையின் வந் திடை விராய்
நஞ்சு சூழ் விழிகள் பூ மழையின் மேல் விழ நடந்
திஞ்சி சூழ் மிதிலை மா வீதி சென் றெய்தினான்.

இ-ள். மாதர்களின்கூட்டம் மாளிகைகளினின்றும் வெளியே வந்து (மற்றச் சனங்களோடு) கலக்க, (அவர்களுடைய) பார்வை (மாரி) (தேவரும் மனிதரும் பொழியும்) பூமாரியினும் அதிகமாகத் தம்மீது விழ, இராமர் மிதிலைநகர வீதியிலே செல்வாரானார்.

பஞ்சி - பஞ்சு. அது செம்பஞ்சுக்காகிச் செம்பஞ்சுக்குழம்பைக் குறித்தது. பண்ணை - பெண்களின்கூட்டம். விராய் - விரவி - கலந்து. மழையின் மேல் - மழையினும் அதிகமாக. இஞ்சி - மதில்.

சூழ், இரண்டாம் அடி நான்காம் அடிகளில் தன் பொருளாகிய வளைதலேயும், எதுகையில்நிற்றல் காரணமாக முதலடியில் ஊட்டுதலே யும் மூன்றும் அடியில் ஒத்தலையும் உணர்த்தியது.

[தெருவில் வந்துசேர்ந்த மாதருள் பேதைமுதலாகப் பேரிளம் பெண் ஈறாக எழுபருவத்துப் பெண்களும் இருந்தார்கள்.]

உலாவியற்படலம்.

இராமர் மிதிலைவீதியிற் பவனியாகச்சென்றதைக் கூறுவது.

(உலா - பவனி - ஊர்கோலம். இயல் - தன்மை; இலக்கணம்)

[மான்கூட்டமும் மயிற்கூட்டமும் மின்கூட்டமும்போன்ற மாதர் கூட்டங்கள், தேனுண்ண மொய்க்கும் வண்டுகள்போல, இராமர் அழகை நோக்க நெருங்கிக்கூடின.]

187. கண்ணினற் காதல் என்னும் பொருளையே காண்கின் ரேம், இப்
பெண்ணின்நீர் மையினல் எய்தும்பயன் இன்று பெறுதும்என்பார்,
மண்ணில்நீர் உலர்ந்து வானம் மழை அற வறந்த காலத்
துண்ணும்நீர் கண்டு வீழும் உழைக்குலம் பலவும் ஒத்தார்.

இ - ள். (மாதர்கள், 'நாம் இதுவரை காதாற்கேட்டதேயன்றிக் கண்ணுற்பாராத) காதலென்றபொருளை (—காதலே உருக்கொண்டாற் போன்ற இவரை — இன்று நேராகக்) கண்ணாலே காண்கின் (ற பாக்கியம் பெற்) ரேம், நாம் பெண்ணாகப் பிறந்ததனுற் பெறக்கூடிய பிரயோசனத் தை இன்று பெறுவோம்' என்று எண்ணுவாராய், பூமியில் (எங்கும்) நீர் வற்றி வானமும் மழை (பெய்தல்) வறட்சி உண்டான காலத்திலே உண்ணும் நீரை (ஓரிடத்திலே) கண்டு (அந்நீரருகே) திரளும் மான் கூட்டங்களை ஒத்தார்கள்.

பெண்ணின் நீர்மை - பெண்தன்மை - பெண்மை. பெறுதும் - பெறுவோம். என்பார் - என்றெண்ணுவார் (குறள். ௩௬). வீழும் -

திரளும் (சிந்தாமணி). இப்பதம் இப்பொருள்பட இப்படலத்தில் ௫-ம் பாட்டிலும் வருதல் காண்க. உழை - மான். குலம் - கூட்டம்.

மாதர் கூட்டங்கள் பலவாயிருந்தமை குறிக்க 'உழைக்குலம் பலவும் ஒத்தார்' என்றார்.

188. பள்ளத்துப் பாயும் நன்னீர் அனையவர், பானல் பூத்த
வெள்ளத்தும் பெரிய கண்ணார், மென் சிலம்(பு) அலம்பும் மென் பூத்
தள்ளத், தம் இடைகள் நோவத், தமைவலித் தவன்பாற் செல்லும்
உள்ளத்தைப் பிடித்தும் என்ன, ஓடுகின் றாரும் ஒத்தார்.

இ - ள். மாதர்கள் தம்மை இராமர்பால் இழுத்துக்கொண்டு (தமக்கு முன்னாகச்) செல்லும் தம்மனத்தை (எட்டிப்) பிடிப்போமென்று ஓடுகின்றாரையும் ஒத்தார்கள்.

பள்ளத்துப் பாயும் நல் நீர் அனையவர்—தண்ணீர் பள்ளத்தை நோக்கி யோடுதல்போல இராமரை நோக்கி யோடும் மாதர்கள். பானல் - கருங்குவளை. பானல் பூத்த - கருங்குவளைமலர்போல மலர்ந்த. வெள்ளம் - கடல். வெள்ளத்தினும் பெரிய கண்ணாரெனற்பாலது செய்யுளாதலால் வெள்ளத்தும் பெரியகண்ணாரென இன் உருபு தொக்கு வந்தது. வேறோரிடத்துக் 'கஞ்சத்தி னளவிற்றேனும் கடலினும் பெரிய கண்கள்' என்பர். சிலம்பு அலம்பும் மெல் பூ தள்ள - சிலம்புகள் ஒலிக்கும் மெல்லிய பூ (ப் போன்ற பாதங்கள்) தள்ளாட. வலித்து - இழுத்து. பிடித்தும் - பிடிப்போம். பள்ளத்துப்பாயும் நன்னீர் என்று உவமானத்தைமட்டும் கூறி 'இராமரை நோக்கி ஓடும் மாதர்' என்ற உவமேயத்தைக் கூறாமலே சிறிதும் ஐயமின்றி நன்கு விளங்கவைத்த நயம் பாராட்டற்குரியது.

189. அரத்தம் உண் டனைய மேனி அகலிகைக் களித்த தாளும்,
விரைக் கருங் குழலிக் காக வில் இற நிமிர்ந்து வீங்கும்
வரைத் தடங் தோளும், காண மறுகினில் வீழும் மாதர்,
இரைத்து வங் தமிழ்தின் மொய்க்கும் ஈ இனம் என்ன லானார்.

இ - ள். அகலிகைக்கு (ச் சாபம் ஒழித்து) அருள்செய்த தாளையும் சீதாதேவிக்காக வில்லொடித்த தோளையும் காணும்படி தெருவிலே திரண்ட மாதர்கள் அமிழ்தில் மொய்க்கும் வண்டுக்கூட்டம் போன்றார்கள். அரத்தம் உண்டு அனைய - செந்நிறத்தை உட்கொண்டாற்

போன்ற. அளித்தல் - அருள்செய்தல் (சங்க அகாதி). விரை - வாசனை. இற - ஒடிய. விழும் - திரளும் (சிந்தாமணி). இரைத்து - ஒலித்து. ஈ - வண்டு. தோள்கண்டார் தோளேகண்டார்! தொடுகழற் கமலம் அன்ன, தாள்கண்டார் தாளேகண்டார்! தடக்கைகண்டாரும் அஃதே" என்பதற்கியைய, இராமரது எல்லா உறுப்புக்களும், ஒன்று போல, அழகுடையனவாயினும், மாதர்கள் தம்போன்ற இருபெண் களுக்கு நன்மைசெய்த தாளையும் தோளையும் விசேடமாகக் காண விரும்பினர்களெனலாம்.

190. வீதிவாய்ச் செல்கின் றான்போல் விழித்திமை யாது நின்ற
மாதரார் கண்களூடே வாவுமான் தேரிற் செல்வான்,
யாதினும் உயர்ந்தோர் தன்னை யாவர்க்கும் கண்ணன் என்றே
ஓதிய பெயர்க்குத் தானே உறுபொருள் உணர்த்தி விட்டான்.

இ - ள். (தோற்றத்தில்) வீதியிலே (உலாப்) போவார் போன்று, (உண்மையில், தம் அழகை நன்கு நோக்கக் கண்களை அலர) விழித்து (இமைத்தால், அச்சமயத்தில், அவ்வழகின் காட்சி மறையுமென்று) இமை கொட்டாமல் நின்ற மாதர்களுடைய கண்களுக்குள்ளே (தாம் மாத்திர மன்றித்) தாவும் குதிரை பூட்டிய (பெரிய தேரோடு செல்வா ராகி, உயர்ந்தோர்கள் தம்மை எல்லாருக்கும் கண்ணன் என்பதற்குப் பொருள் (எல்லாருடைய 'கண்ணிடத்தவன்' என்று இராமர்) விளங்கச் செய்துவிட்டார்.

வீதிவாய் - தெருவில். வாவும் - தாவும். மான் - குதிரை. யாதினும் - எதனிலும் - கல்வி அறிவு ஒழுக்கங்கள் எதனிலும். கண்ணன் - கண்ணில் உள்ளவன்.

கரியன் என்று பொருள்படும் 'கிருஷ்ணன்' என்ற வடமொழிச் சொல் 'கண்ணன்' எனத் தமிழில் மருவியதென்பர். அச்சொல்லுக்குப் பொருள் 'கண்ணினிடத்து உள்ளான்' என்று காரணம் கற்பித்துக் கூறிய நயம் கவனிக்கத்தக்கது.

191. "எண்கடந் தல கிலாதின் றேகுறும், இவன் தேர்" என்று,
பெண்கள் தந் தம்மில் நொந்து பேதுறு கின்ற காலை,
மண்கடந் தமரர் வைகும் வான்கடந் தானைத் தான் தன்
கண்கடவாமற் காத்த காரிகை வலிய ளே காண்.

இ-ள். 'மனவேகத்தையும் கடந்து (தான் செல்லும் வேகத்துக்கு) அளவில்லாமல் செல்லாநின்றது இவர் தேர்' என்று பெண்கள் தங்கள் தங்களுள்ளே (நினைந்து) வருந்தி மயங்குகின்றபோது, (ஈரடியால்) பூமியைத் தாண்டி வானையுந் தாண்டிய (திரிவிக்கிரமாவதார மெடுத்த திருமாலாகிய) இராமரைத் தம்பார்வைக்கு எட்டாததூரம் போகாதபடி (எப்போதும் கிட்ட இருக்கும் வண்ணம் தம்மணவாளராகக்கட்டிக்) காத்துக்கொண்ட சீதாபிராட்டி வல்லமையுள்ளவரே.

எண் - மனம். அது மனவேகத்தைக்குறித்தது. இவ்வாறே 'சிந்தை' மனவேகத்தைக் குறிப்பதைப் பெருங்கதை உஞ்சைக்காண்டம் கங்கைநீராடியது 215-ம் அடியிற் காண்க. அலகு - அளவு. தம்தம் மில் - தங்கள் தங்களுள்.

மற்றைய மாதருக்குச் சிறிது நீடித்தநேரமும் சற்றுத் தூரத்தி லேயும் காட்சி அளிக்காதவரும் நினைக்குமுன்னே மூன்றுலகத்தையும் கடந்தவருமாகிய இராமரை எப்போதும் தம் அருகேயிருக்கும்படி தம் மணவாளராகச்செய்துகொண்ட சீதாதேவியின்சத்தி வியப்புறக் கூறப்பட்டது.

காதலர்க்குத் தம்மாற் காதலிக்கப்பட்டாரைக்கண்டு களிக்கும் பொழுது நெடும்பொழுதா யிருப்பினும், அது கணம்போலத் தோன்று தலே, ஊர்கோலமாக மெல்லச் சென்ற இராமர்தேர் மனவேகத்தினும் அதிவேகமாகச் சென்றதெனக் காதலுற்றமாதர் கூறினரென்பதனைக் குறிப்பித்தார்.

[ஒருமாது, தனக்குரியவைகளுள், உயிரொன்றை ஒழிய, ஆடை யும் வளையும், நாணும் நிறையும் முதலிய புறப்பொருள்களும் அகப் பொருள்களு மாகிய எல்லாவற்றையும் போக்கிநின்றாள்.

இராமபிரானது கரிய திருமேனியின் ஒளி தோய்ந்து மாதர்கண் கள் கரியவாயினவோ? மாதர்கள் கண்ணொளிபாய்ந்து அவர் திருமேனி கரியதாயினதோ? தெரியேம்.]

192. மாந்தளிர் மேனி யாள், ஓர் வாள் நுதல், மதனன் எங்கும்
பூந் துணர் வாளி மாரி பொழிகின்ற பூசல் நேர்க்கி,
"வேந்தர் கோன் ஆணை நோக்கான், வீரன் வில் ஆண்மை பாரான்,
ஏந்திழை யாரை எய்வான் யாவனோ ஒருவன்" என்றாள்.

இ - ள். ஒருமாது, மன்மதன் எல்லா மாதர்மீதும் புட்பசரமாரி பொழிந்து செய்கின்ற சண்டையைநோக்கி, "(எளியாரை வலியார் வருத்தாது காக்கும்) சக்கரவர்த்தியின் ஆணையை மதியானாய், வீர (ர்க்குள் வீர)ராகிய இராமரது வில்லாண்மைக்கு எதிரேநிற்கும் தகுதி ஒரு வருக்குமில்லை யென்பதையும் எண்ணிப்) பாரானாய் மாதரை எவனோ ஒருவன் எய்கின்றான்" என்றாள்.

வாள் நுதல் - ஒளிபொருந்திய நெற்றி (யுடையாள்). துணர் - கொத்து. 'ஏந்திழையாரை யாவனோ ஒருவன் எய்வான் எனக் கூட்டுக.

193. சொன்னலம் கடந்த காமச் சுவையை ஓர் உருவம் ஆக்கி
இன் நலம் தெரிய வல்லார் எழுதிய தென்ன நின்றாள்,
பொன்னையும் பொருவும் நீராள், புனைந்தன எல்லாம் போகத்,
தன்னையும் தாங்க லாதாள், துகில் ஒன்றும் தாங்கி நின்றாள்.

இ - ள். 'சொல்லவொண்ணாததும் (மற்றெல்லா) இன்பங்களுக்கும் மேற்பட்டதுமான காம இன்பத்தை ஒரு வடிவமாக இன்பங்களை(ப் பகுத்தறிந்து அவற்றுட் சிறந்தவை இவையென)த் தெரியவல்லான் (ஆகிய சித்திரிகன்) சித்திரித்த சித்திரமென்று சொல்லும்படி நின்ற ஒரு மாது, (காமபரவசத்தால்) தான் அணிந்திருந்தன வெல்லாம் (நெகிழ்ந்து) நீங்கத் தன்னுடம்பையே தாங்கமாட்டாளாய் (ச் சோர்வு மிகுந்திருந்தும் மானம் மிக்குடையாளாதலால் அம்மானத்தைக் காக்கும்) சேலை யொன்று மட்டும் (நீங்கவிடாது) தாங்கி நின்றாள்.

'சொல் கடந்த,' 'நலம் கடந்த' எனக் கூட்டிப் பொருள்கொள்க. எழுதல் - சித்திரம் எழுதுதல். எழுதியது - சித்திரித்தது - சித்திரம், இன் நலம் - இனிய இன்பங்கள்.

"அகத்து நிகழ்ந்த காமச்சுவை பிறர்க்குப் புலப்படுமாறு இற்றென வாயாற் கூறலரியதும் ஏனை உலக வின்பங்களிற் சிறந்ததுமாகலின், 'சொன்னலங் கடந்த காமச் சுவை' என்றார்."

[ஒருத்தி, காமபரவசத்தினால், இராமரையன்றி வேறொருபொருளையும் காணாளாய் "நால்வகைப் படையுடன் பெருவைபவத்துடன் வரற்பாலாகிய இவர் தனித்து வருவானேன்?" என்றாள்.]

194\. மைக் கரும் கூந்தற் செவ்வாய் வாள் நுதல் ஒருத்தி, உள்ளம்
நெக்கனள், உருகு கின்றாள், "நெஞ்சிடை வஞ்சன் வந்து
புக்கனன், போகா வண்ணம் கண் எனும் புலங் கொள் வாயில்
சிக்கென அடைத்தேன், தோழி! சேருதும் அமளி" என்றாள்.

இ - ள். ஒருத்தி, (காமத்தால்) நெஞ்சம் நெக்கு உருகுகின்றவள், (தன் கண்ணைக் கையால் இறுகப் பொத்திக்கொண்டு) "தோழீ! (எனக்குக் காதல் உண்டாக்கிவிட்டு அதனைத் தீர்க்காத) கள்ளன் (என் கண் வழியாக) என் உள்ளத்துள்ளே புகுந்தான். (அவன் வெளியே தப்பிப்) போய்விடாதபடி (அவன் உள்ளே நுழைந்த என்) கண்ணாகிய வழியை உறுதியாக அடைத்தேன். நாம் பள்ளியறையை அடைவோம். (என்னை அங்கே நடத்திக்கொண்டுபோவாயாக)" என்றாள்.

மை - மேகம். வாள் - ஒளி. நுதல் - நெற்றி. நெக்கனள் - இளகினவள் (ஆகி). புலம் - விடயம். வாயில் - வழி. சிக்கென - உறுதியாக. சேருதும் - சேர்வோம். அமளி - பள்ளியறை; படுக்கை.

[ஒருத்தி தன்னை மன்மதன் அம்புகள் துளைத்ததையும் ஆடை ஆபரணங்கள் நெகிழ்ந்து நீங்கினதையும் அறியாளாய், ஏனை மாதர்கள் இராமரை நோக்குவதைக்கண்டு பொறாமல் அவர்களைக் கடுமையாகக் கோபித்துப் பார்த்தாள்.]

195\. களிப்பன, மதர்ப்ப, நீண்டு கதுப்பினை அளப்ப, கள்ளம்
ஒளிப்பன, வெளிப்பட் டோடப் பார்ப்பன, சிவப்புள் ஊறி
வெளுப்பன, கறுப்ப ஆன வேற் கணாள், ஒருத்தி, உள்ளம்
குளிர்ப்பொடு காண வந்தாள்; வெதுப்பொடு கோயில் புக்காள்.

இ - ள். ஒருத்தி குளிர்ந்த மனத்துடன் இராமரைப் பார்க்க வந்தாள்; கொதித்த மனத்துடன் வீட்டுக்குப்போனாள்.

களிப்ப - மகிழ்வன - மகிழ்ச்சியைக் காட்டுவன. மதர்ப்ப-செருக்குவன - இறுமாப்பைக் காட்டுவன. நீண்டு - காதுப்பக்கம் சென்று. கதுப்பு - கூந்தல், கன்னம் அன்று. "கொண்டையுறு நீலவிழி" (குற்றாலத்தலபுராணம் கவுற்சனச்சருக்கம் க.) கொண்டை - கூந்தலைப் பக்கத்து முடித்த முடி. கள்ளம் ஒளிப்பன - ஒரு சமயத்தில் கள்ளக் கருத்தை வெளிப்படாது மறைத்துக் கபடமாகப் பார்ப்பன. வெளிப்

பட்டோடப் பார்ப்பன - மற்றொரு சமயத்தில், மனச்சிறையில் அடைத்திருந்த அக் கள்ளக்கருத்து யாரும் அறியும்படி வெளிப்பட்டு ஓடச் சுத்தமான பார்வையாகப் பார்ப்பன. சிவப்பு, சிவந்த ரேகைகளைக் குறித்தது. வெளுப்ப - (வெள்விழி, தூய) வெண்மையாயிருப்பன. கறுப்ப - (கருவிழி, கனிந்த) கருநிறமுடையன. குளிர்ப்பு, மகிழ்ச்சியைக்குறித்தது. வெதுப்பு - (காம) வெப்பம். கோயில் - அரண்மனை. 'உள்ளம் குளிர்ப்பொடு வந்தாள், உள்ளம் வெதுப்பொடு கோயில்புக்காள்' என உள்ளத்தை வெதுப்பின்முன்னும் கூட்டுக.

இப்பாட்டில் அதிசாதுரியமாக மாதர்கண்ணின் தொழில்கள் பலவற்றை இனிது தொகுத்துக்கூறிய வனப்புப் பாராட்டத்தக்கது.

பாட்டின் முக்கிய கருத்தாகிய 'வீட்டினின்று மனக்குளிர்ச்சியோடு வெளியே வந்தவள் மனவெப்பத்தோடு திரும்பி உள்ளே போனாள்' என்பதை ஈற்றடியில் அமைத்துக்கொண்டு உறுப்பிற் சிறந்த கண்ணை வருணனையிற் சிறந்த வருணனையால் சிறப்பித்து ஏனை மூன்றடிகளையும் பூரித்த கவித்திறம், யாவரையும், விசேடமாகக் கவிஞரையும் மிக மகிழ்விப்பது.

[ஒரு மாது, அளகபாரமும் தனபாரமும் ஆடையாபரண பாரமும் மிக்க பிறமாதர்கள் தன்முன் நின்று தான் இராமரைக் காணாதபடி மறைக்க, வேறு வழி கிடையாமல், அம்மாதாது இடைகளின் இடையே உள்ள சந்து வழியாக, இராமரைப் பார்ப்பாளாயினள்.]

196. தோள் கண்டார் தோளே கண்டார்! தொடுகழற் கமலம் அன்ன
தாள் கண்டார் தாளே கண்டார்! தடக்கை கண் டாரும் அஃதே!
வாள் கொண்ட கண்ணார்! யாரே வடிவினை முடியக் கண்டார்?
ஊழ் கொண்ட சமயத் தன்னான் உருவு கண் டாரை ஒத்தார்!

இ- ள். (இராமபிரானைப்பார்த்த மாதர்களுள்ளே முதற் கண் அவருடைய, தோளை நோக்கும்படி நேர்ந்தவர்கள் (அத்தோளழகில் ஈடுபட்டு ஏனையுறுப்புக்களை நோக்கும் எண்ணமே தோன்றாராய்த்) தோளழகையே நோக்கிக்கொண்டிருந்தார்கள்! தாளழகை நோக்கியவர்களும் தாளழகையே நோக்கிக்கொண்டிருந்தார்கள்! கையை நோக்கியவர்களும் அப்படியே! அம்மாதர்களுள் யார்தாம் அவர் வடிவை முடியக் கண்டவர்கள்? (ஒருவரும் இலர்.) அவர்கள், ஒன்றுக்கொன்று மாறு

(பட்ட அபிப்பிராயங், கொண்ட சமயங்களில் (கூறப்பட்ட) அவருடைய (வெவ்வேறு) மூர்த்தங்களை (மனக்கண்ணாற்) கண்ட சமயிகள் (தாம் தாம் கண்ட மூர்த்தமன்றி வேறு மூர்த்தங்களைக் காணாதவர்கள்) போன்றார்கள்.

தொடுகழல் - கட்டிய வீரகண்டையையுடைய. அஃதே - தடக்கையே கண்டார். மூன்றாம் அடியில் 'கொண்ட' என்பது எதுகையில் நிற்றல்பற்றி 'நிகர்த்த' என்னும் பொருள் குறித்தது. ஊழ் - பகை (கம்பரா.நாட்டு.கள); முடிவு (மணிமேகலை; முறை (மேற்படி). ஊழ் கொண்ட- "இதனிற் சிறந்ததில்லையென்று தனித்தனியே முடிவு கொண்ட". 'ஊழ்கொண்ட' என்பதற்குத் தத்தமக்குரிய 'முறையைக் கொண்ட' என்றும் பொருள் கூறலாம்.

[அண்டங்களனைத்தையும் வயிற்றிலடக்கிய திருமாலாகிய இராமபிரானினும் பெரியார் யார் உளர்? அவ்வளவு உருவிற் பெரியார் (அதினும் கருணையிற் பெரியாராய்) ஒரு மாது வருந்தாது உய்யும்படி அவள் உள்ளத்துள்ளே ஒடுங்கினார்.

ஒருத்தி இராமரைப்பார்க்க வீட்டினின்று மேகலையும் சிலம்பும் பேரொலி செய்ய வேகமாகக் காலால் நடந்து வெளியே வந்தாள்: அவளைக் கண்டு, மயல்கொண்டு, வசமிழந்து தோழியர் கைம்மீது சுமந்து உள்ளே கொண்டுபோகப்பட்டாள்.]

197. அருப்பு மென் முலை யாள், அங் கொர் ஆயிழை,
"இருப்பு நெஞ்சினை யேனும், ஓர் ஏழைக்காப்
பொருப்பு வில்லைப் பொடிசெய்த புண்ணியா!
கருப்பு வில் இறுத் தாட்கொண்டு கா" என்றாள்.

இ - ள். ஒருமாது, (இராமரை நோக்கி, "எம்போன்ற) ஒரு பெண்ணுக்காக (வன்மையான) மலைவில்லை ஒடித்த புண்ணியரே! (அவளைக் காதலித்தது போல எங்களைக் காதலிக்காமல் எங்கள் திறத்தில்) இரும்பு (போல இளகாத) நெஞ்சினையுடையீரென்றாலும், (காதல் காரணமாகவன்றிக் கருணை காரணமாக, எங்களுக்காகக் கரும்புவில்லை ஒடித்து (எங்களை மனைவியராகக் கொள்ளவில்லையானாலும்) அடிமைகளாகக் கொண்டு காப்பீராக" என்றாள்.

ஆய் இழை - தெரிந்தெடுத்த ஆபரணம். அது அன்மொழித் தொகையாய் அதனையுடையாளாகிய பெண்ணைக் குறித்தது. ஏழை - பெண். இறுத்து - ஒடித்து. ஆட்கொண்டு - அடிமைகொண்டு. அருப்பு, இருப்பு கருப்பு என்பவை அரும்பு இரும்பு கரும்பு என்பவைகளின் விகாரம்.

[ஒருத்தி, இராமர் தேர் கண்மறையப்போனபின், அவர் உரு வெளித்தோற்றத்தைக்கண்டு "தேர்மீது செல்லலைவிட்டுத் திரும்பி இங்கே கிட்ட வந்து அவர் என் கண்ணெதிர் நிற்பதன்காரணம், அவர் கபடமோ? என்கனவோ"? என்றாள்.

ஒருத்தி, இராமர் போனபின் அவர்பால் அனுப்புதற்குத் தன் மன மன்றி வேறு தூது கிடையாதவளாய் விரகவேதனையால் உயிர் தளர் கின்றவள், "என்போல வருந்தாது அவரை அடையச் 'சீதை எத் தவம் செய்தனளோ!' என்றாள்.

ஒருத்தி, காதல் மிகுதியால், துடித்து, அழுது பெருமூச் செறிந்து, சோர்ந்து, தோழியைத் தொழுது "என்னை இவ்வாறும்படி செய்த மன்மதன், அவரை நான் சித்திரத்திலாவது கண்டு களிக்கும்படி அவர் வடிவை யெழுதவல்லனே! (அவ் வல்லமை யில்லாதவன் என்னை ஏன் மயல்கொள்ளச்செய்தான்?)" என்றாள்.

ஒருத்தி, பக்கத்து நின்றாரை நோக்கி "இவ்வளவு அழகு மனித னுக்கு அமைதல் இயல்வதோ! இவர் திருமாலே! இது உண்மை யென் பதை நான் இப்போதே காண்கின்றேன்! பின்பு நீங்களும் காண்பீர்கள்!" என்றாள்.

ஒருத்தி, "இராமர் இந் நகர்க்கண் வந்தது சீதையின்பிதா செய்த தவத்தால், நமது பிதாக்கள் தவத்தாலன்று; இராமர் சீதையை மணத்த லன்றி நம்மை மணத்தல் இல்லையாதலால்" என்றாள்.

ஒருத்தி, "முனிவர் மன்னர் முதலியோர் உடன் வரவின்றி இராமர் தனியே என் கனவிலே வருவாரோ?" என்றாள்.

ஒருத்தி, "இவர் தம்மால் காம மயக்க மடைந்த மாதர்பால் ஒன்றும் விரும்பாராய் அவரை ஒரு சிறிதும் நோக்காராய்ச் சும்மா செல்கின்றார்: ஆதலால், கருணையென்பதைக் கண்டறியாதவர். ஞானியோவென்னில், சீதாதேவியை விரும்புவானேன்? இவர் ஏனை மாதர்பால் இரக்கமில்லாத படுகொலைகாரர்!"

ஒருத்தி, காமபரவசத்தால், ஒரு செயலுமின்றி, உணர்ச்சியு மின்றிப் 'பிழைப்பாள்' என்று சிலரும் 'பிழையாள்' என்று சிலரும் கூறுமாறு ஓய்ந்து, ஒடுங்கிக்கிடந்தாள்.

ஒருத்தி, இராமரை அடைதல் கூடுமென்று அவர் தேர்பின் செல்வாள்; கூடாதென்று திரும்புவாள்; இவ்வாறாக ஊசலாடுவாள் போன்றாள்.

ஒருத்தி, மற்றொருத்தியை நோக்கி "என் மனத்தைக் காணேன். அஃது இவ்வழியாகப் போகக்கண்டாயோ?" என்று நாணமின்றிக் கேட்டாள். இச்சை கொண்டார்க்கு லச்சையுண்டோ?]

198\. நங்கை அங்கொரு பொன், "நயந் தார் உய்யத்
தங்கள் இன் னுயி ருங் கொடுத் தார், தமர்;
எங்கள் இன் உயிர் எங்களுக் கீகிலா
வெங்கண் எங்கண் விளைந்த திவற்" கென்றாள்.

இ-ள். ஒருத்தி, "இவர் சுற்றத்தார் (ஆகிய இவருடைய முன்னோர் தம்பால்) அன்புற்றார் பிழைக்கும்படி தங்கள் இனியஉயிரையும் கொடுத்தார்கள். (அப்படிப்பட்டவர்கள் வழித்தோன்றிய) இவருக்குத் தம்பால் அன்புற்றதனால் இறந்துபடும்) எங்களுக்கு எங்களுயிரையே கொடுக்காத கொடுமை எங்கேயிருந்து உண்டாகியது!" என்றாள்.

பொன்-இலக்குமி (போல்வாள்). நயத்தல்-விரும்புதல்; அன்பாற் சிறத்தல் (பரிபாடல்). தவர்-உறவினர். வெங்கண்-கொடுமை.

[ஒருத்தி, முத்துமாலை சோர, மற்ற ஆபாணங்களனைத்தும் சோர, ஆடை சோர, ஆவி சோராநின்றவள், "எவரும் அஞ்சும் இந்த வில்வீரர் எதிரிலேயே என்னைக் கொல்லுகின்ற மன்மதனினும் வலியார் யார்!" என்றாள்.

இவ்வாறு மாதர்கள் காதலால் துன்புறுநிற்க, இராமர், அரசர் குழாம்புடைசூழத் தம்பியரோடு சென்று வசிட்டரும் விசுவாமித்திரரும் இருந்த மண்டபத்தைச் சேர்ந்தார். அங்கே தசரதரும் வந்தார்.]

[தொடரும்]

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

ஸ்ரீ:

புரூரவச்சரிதை.

[௧௱௫-ம் பக்கத் தொடர்ச்சி.]

கிரவுஞ்சப்படலம்.

தந்துவார் துணைத்தாட்கமலாசனத்தலைவன்
இந்திராதியர்யாவருமெம்பிரான்றன்னை
வந்துசூழ்ந்தனர்யானும்போய்வலஞ்செய்வேனென்ன
வுந்துதேரவனுத்தரத்துற்றனனன்றே. (௧)

மொய்கொள்வாரிதியுலகமாந்தலைமகன்முன்னர்
மையராவுகட்கங்குலந்தெரிவையிவ்வைகல்
ஐயநீங்கிடமுதுக்குறைந்தெனவந்திமடந்தை
செய்யகோலமுற்றெதிர்ந்தெனவெழுந்ததுசெக்கர். (௨)

வளைக்கும்வெவ்விருட்கருங்கடன்முகட்டினில்வந்து
முளைக்கும்வெண்கலைத்துழவிறைற்றுழவிமுன்றுலகும்
விளைக்கும்வென்றியங்கடற்றுறைகடந்தமீகாமன்
றிளைக்குமம்பியினெழுந்தது குழவிவெண்டிங்கள். (௩)

அரவநீள்வடம்பிணித்துமந்தரவரையதனாற்
கரைசெயாப்பெருங்களியமுதெழும்படிகடையத்
திரைசெய்வேலையினமுதவெண்டிவலைகடெறித்த
வொருவன்மேனியிற்பொலிந்தனவுடுக்களாலும்பர். (௪)

விரைவினம்பிறைக்காகுலமியற்றியவெய்யோன்
குரவடைந்தனனென்னவாய்மலர்ந்தனகுமுதங்
தெருளிலோர்கள்வாய்திறந்திடல்யாமும்வாய்திறத்தல்
கருமமன்றெனவடங்கினர்போன்றனகமலம். (௫)

மஞ்சுதோய்நெடுமாடமேலாடவர்மகளிர்
நெஞ்சுதோய்முலைநேமிகைப்பற்றலுநேரா
வெஞ்சலின்றியெம்மையும்பற்றுவாரென்ன
வஞ்சிநீங்கினவொத்தனசக்ரவாகம். (௬)

தரணிகாறருங்கவ்குலாம்பெரும்பயிர்தழைப்பக்
கருதுவாரிநீர்பாய்ச்சுவான்மாலையக்கருத்தா
விரவுவெள்ளியங்கூன்கலைக்கயிற்றினால்விடல்போல்
வருணவாரியிற்றாழ்ந்தது குழவிவெண்மதியே. (௭)

ஆயபோறிவொடுபொருணீங்கவாதன்போ
னேயமாகியேயெங்கணுமிடையறநிறைந்த
மாயனார்பரம்பரமனார்வேறெனமதிக்கும்
தீயபாதகர்விழுநரகொத்தது திமிரம். (௮)

அள்ளலாமெனுமிருட்பிழம்புலகெலாமடைய
நள்ளிராவிலக்கன்னியையார்கொலோநயந்தார்
உள்ளமீர்குவனெனவுருத்துலவினனுலவும்
பிள்ளைமாருதத்தேருடையொருதனிப்பெரியோன். (௯)

அன்னகன்னிபூணலர்முலைப்பெருங்குவட்டிடையே
கொன்னுறுக்கணைதொடுத்திடப்பூங்கணைகொளுவி
யுன்னினானவள்மனமிலக்கன்றெனவுணர்ந்தே
பின்னதாகிய தூணியிற்பெய்தனன்பெயர்ந்தான். (௧௦)

வாங்குதெண்டிரையுலகெலாந்தருமமேவடிவாய்
வீங்குகின்றது தானெனும்பருவம்விட்டொழிய?
வாங்குகா........வந்தனுகு........னுவைவிட்டகல?
நீங்குமாயையினீங்கினநீங்கலாநிசியே.? (௧௧)

செறிந்தபேரிருட்கங்குலாங்காமிசைசெல்ல
வறிந்தவாரணங்காரணக்குறியுணர்ந்தழைப்ப
மறிந்ததெண்டிரைக்கடனிறத்திருமறுமார்ப
னெறிந்தசெஞ்சுடர்த்திகிரிபோற்கதிரவனெழுந்தான். (௧௨)

தஞ்சமின்றியவெளிமையிற்செம்மையின்றன்மை
கொஞ்சமன்றெனவடங்கினர்போன்றனகுமுத
மஞ்சுபூதமுமைம்பெரும்புலன்களுமடங்க
நெஞ்சுணோக்குவோர்கண்களையொத்தசெங்நீலம். (௧௩)

புள்ளியந்தனியளியெனுமேழிசைப்புலவோற்
குள்ளுவந்தினிதூறியபொருளெலாமுண்ண
வெள்ளலின்றியேமுகமலர்ந்தன்பொடுமீயும்
வள்ளியோர்முகமலரெனமலர்ந்தது வனசம், (௧௪)

பத்திகைப்படுமறையவரொடுஞ்செழும்பருவப்
பித்திகைப்பெருவனங்களுங்கண்மழைபெய்யக்
கத்திகைக்குழலியரொடுங்கலந்தவர்மனமு
மெத்திகைக்கணுஞ்சங்கமும்பேரியுமேங்க. (௧௫)

பண்ணியம்பிடச்சுரும்பினமூசன்றிடப்பதியை

அக்கணத்தினிலணிதுழாய்மணிமுடியமலன்
பக்கநின்றுயர்கலுழனைச்சிறிதுகண்பார்க்க
வெக்கருத்தெவையென்பணியென்றினிதிறைஞ்சச்
செக்கர்வாய்திறந்தொருவினையாட்டினைத்தெரித்தான். (௧௭)

பன்னகப்பெருவயிரிகேளிமையவர்பரம
னன்னநான்முகன்முதலியயாவருமறியா
தின்னசெக்கடிக்கிடக்குமிப்பங்குவையெடுத்தே
பின்னோர்தீவினிலுய்த்திடுகென்றனன்பெரியோன். (௧௮)

கடனிறப்பிரானுரைத்தலும்பசியகட்கவைநா
விடதரப்பகைதொழுதெழுந்தன்னவன்விடைகொண்
டுடலுயிர்ப்பொறையொழிந்திலனென்னநொந்துழலும்
படர்மிகுத்தவப்பங்குவைக்கவர்ந்தனன்படர்ந்தான். (௧௯)

பணத்தபாந்தளின்பஃறலைக்கிடந்தபார்மகளை
மணத்ததிண்புயமிரண்டையுமொன்றுறவலித்தே
கணத்தினிற்கடருவியகலுழனக்கரியோ
னிணைத்தமந்தரங்கொண்டகல்கின்றதுமியையும். (௨௦)

வயினதேயனார்வல்லையிற்கவர்ந்துவான்செல்ல
வயனிழைத்ததீவினைகிடந்தனகொலென்றயர்ந்தான்
உயிர்பிழைத்திடலரிதிதற்கிரையன்றேவுடலஞ்
செயலினிப்பிறிதிலதெனவுணர்ந்தனனறநிலோன். (௨௧)

அரசிழந்தனனரும்பதிநீங்கினனன்பாய்
விரவுகாந்தையையொழிந்தனன்மக்களைவிடுத்தேன்
புரைசெய்யாக்கையுந்தாங்கினன்விசும்பிலூர்புள்ளுக்
கிரைசெய்வான்கொலோவிதித்தனைபரமவென்றிசைத்தான். (௨௨)

வேறு.

மெய்யாயழியாதவெளிக்கிடையே
பொய்யாகியமாலைபுணர்த்தியவா
செய்யாசெயலற்றவர்சிந்தைவிடா
வையாவெளியேயுன்னடைக்கலமே. (௨௩)

ஓவாநிலனுமுலவும்புனலுந்
தீவாயுவும்வானொடுதேவர்களுந்
மூவாமுதலும்முதன்மூவர்களுந்
மாவாவெளியேயுன்னடைக்கலமே. (௨௪)

பொல்லாமணியேபுனையாவணியே
யெல்லாவையுமாகியிருந்தவனே
சொல்லாலிதுவென்பதொர்சுட்டுருவு
மல்லாதவனேயுன்னடைக்கலமே. (உரு)

பொறிவாய்வழிபுந்திபுறத்துவிடா
நெறிவாய்தவரான்பொடுநின்றவனே
சிறியாய்பெரியாய்செயலேதுமிலாய்
அறியாயறிவாயுன்னடைக்கலமே. (உசு)

நாகாபரணாநயனாயுதசெம்
பாகார்மொழிபங்கரசங்கரனே
மோகாதியின்மூழ்கிமுளைத்திடும்வித்
தாகாதளியேனுன்னடைக்கலமே. (உஎ)

என்றங்கவையோதிடுமேல்வையினில்
நின்றஞ்சலெனுஞ்சொனிகழ்ந்தசிறை
மினறந்தவனுங்கிரவுஞ்சமெனுங்
குன்றின்புடையிற்கொடுபோயினனே. (உஅ)

வேறு.

வரையினோர்புடைவைத்தனன் வைத்துமேல்
விரசுவானறனைநோக்கினன்மெய்யினை
யுரைசெய்யாதுவிடுத்ததென்னோவெனப்
புரைசெய்வாரணமன்னனபுகலுவான். (உகூ)

ஆரையோபுகலாழ்கடலைந்தினைப்
போவிந்தப்பிறங்கலிற்பெய்தனை
தீரவெண்ணலைதீப்பசிதீர்தர
நீரையேனுநிரப்புவதியாரென. (௩0)

வண்ணவெஞ்சிறைநாகவயிரியன்
றண்ணல்வேந்தனையன்பொடுநோக்கியே
புண்ணநல்லமுதூட்டுவனஞ்சலென்
றெண்ணிமாகத்தின்வேகமொடேகினன். (௩க)

கிரவுஞ்சப்படலமுற்றும்.

(தொடரும்.)

உதவிப்பத்திராதிபர்.

ஆசிரியர் நல்லந்துவனார்காலம்.

(௯௯௦-ம் பக்கத்தொடர்ச்சி.)

மேல, ஒன்பதாவதான சிலப்பதிகாரகாலமும் சங்ககாலமும் எட்டாம்நூற்றாண்டென்னுங் கொள்கையை எடுத்துக்கொள்வோம். பிள்ளையவர்கள் சிலப்பதிகாரகாலவாராய்ச்சிசெய்தகாலத்திலேயே இவர்கள் காலவாராய்ச்சி பிழையுடையதென்று பலராலும் காட்டப்பட்டுளது. அதனை மறுத்துக்கூறுமற் றும்கூறினதையே மறுபடியும் கூறுவதைத்தவிர்த்து வேறொன்றும் அவர்கள் சொல்லியதாயில்லை. இவர்களைப்போலவே இவர்களோடு ஒத்துழைக்க முன்வந்தவர் கல்வெட்டுப் பரிசோதகரான திருவாளர் K. V. சுப்பிரமணிய ஐயர் B.A., M.R. A.S. அவர்கள். இவர்கள் சொற்களுக்குப் பொருள்கொள்ளும் விதங்களே விநோதமானவை. முன்னொரு சமயம் இவர்கள் கொண்ட கருத்துக்கள் செந்தமிழிற் குறிக்கப்பட்டுள்ளன. இவர் சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்களைப் பின்பற்றிக் கடைச்சங்ககால மிதுவாகுமென்று பல வியாசங்கள் ஆங்கிலத்தில் எழுதிவிடுத்தார்கள். இவைகட்கெல்லாம் மறுமொழியாகச் சென்னைப் பல்கலைக்கழகச் சரித்திரப்பேராசிரியர் டாக்டர் S. கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள் தமது பல்கலைக்கழகச் சொற்பொழிவுகள் மூலமாகவும், சிறுநூல்கள் மூலமாகவும் முடிவு கூறி வெளியிட்டுள்ளார்கள். இதுவுமன்றி விஜயநகர ஸமஸ்தான கலாசாலைச் சரித்திர ஆசிரியரான ஸ்ரீமான் M. S. இராமசாமி ஐயங்காரவர்கள் பின்வருமாறு எழுதுகிறார்கள்.

*Vidvan Raghava Iyengar collecting the various evidences then available has maintained Kanakasabhai Pillay's

---

*வித்வான் ராகவையங்காரவர்கள் அப்பொழுதுகிடைத்த சான்றுகளையெல்லாந் திரட்டிச் சில காலவேறுபாடுகளுடன் கனகசபைப்பிள்ளைகொள்கையை நிலைநிறுத்தினார்கள். இக்கொள்கையைச் சிலர் ஏற்கவில்லை. அவர்களுள், திவான்பகதூர். சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்களும், சுப்பிரமணியஐயரவர்களும் இங்குக் குறித்தற்குரியர். இவர்கள் சங்ககாலம் கி. பி. 7-ம் (ஏழாம்) நூற்றாண்டாகும் என்று கூறுகின்றனர். ஆனல் இது நிலைநிற்காதென ஆசிரியர் கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள் காட்டினார்கள்.

theory with slight modifications in the dates of a few kings. This view however, was not accepted by a section of scholars among whom Dewan Bahadur Swamikkannu Pillai and Subramania Iyer deserve special mention. These maintain that the date of the Sangam is to be sought in the 7th Centuary A. D. a position since proved untenable by Prof. S. Krishnasami Iyengar.

*   *   *   *   *

The publication of †Cheran-Chenguttuvan at once arrested the attention of scholars who at that time made no serious attempts to controvert Pandit Raghava Iyengar's arguments, Prof. S. Krishnasami Iyengar however took up the subject for re-examination of evidences and rightly concentrated his attention on this important topic. His 'Beginnings of South Indian History' published a few years ago was intended perhaps as *a final reply to the various theories propounded regarding the date of the Sangham.*

*   *   *   *   *

It may be said that he (Prof. S.K.) met the arguments of Subramania Iyer whose bold enunciation of *theories rightly received severe rebuff at the hands of the learned Professor.* (The italics are mine).

---

†'சேரன் செங்குட்டுவன்' என்னும் நூல் பல ஆசிரியர் மனதைக் கவர்ந்ததாயினும், அதனிற் கூறியவைகளை மறுக்க ஒருவரும் முற்படவில்லை. சரித்திர ஆசிரியர் கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள் மறுபடியும் சான்றுகளை ஆராய்ந்து சங்ககாலத்தைத் தாபிக்க முற்பட்டார்கள். அவர்களது 'தென்னிந்திய சரித்திரத்தொடக்கம்' என்னும் நூல் சங்ககாலத்தைக்குறித்து வெளியான பல கொள்கைகளுக்குத் தகுந்த வாய்ப்பூட்டு என்று சொல்லலாம்.

...   .

புதிய கொள்கைகளைப் புகுத்த முற்பட்ட சுப்பிரமணிய ஐயரவர்களுக்கு அவர் தகுதியான மறுமொழிகூறிவிட்டார் என்று சொல்லலாம்.

மேலே கூறியவற்றைக்கொண்டு இவர்கள்கொள்கை பிழையுடைய தென்பதும், ஏமாற்றத்தை யுண்டுபண்ணக்கூடியதென்பதும் சொல்லாமலே விளங்குவதால் இதனைப்பற்றி அதிகம் எழுதவில்லை.

மேல், எட்டாவதான தொகைநூல்களின்காலம் பிற்பட்டனவா வென்பதைப்பற்றி யாராய்வோம். தொகைநூல்களாவன :—

நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தார் சொல்லுங் கலியோ டகம்புறமென்
றித்திறத்த வெட்டுத் தொகை.

என்பனவாம்.

இத்தொகைநூல்களிற் பலவற்றைப் பாடியவர்கள் கபிலர், பாணர், ஔவை, நல்லந்துவனார், மாமூலர், நக்கீரர், ஆவூர்கிழார், கோவூர்கிழார் முதலிய சங்கமேறிய நாற்பத்தொன்பதின்மரும் அவரை யுள்ளிட்டாருமாவர். காலவாராய்ச்சியாளர் இப்புலவர்கள் பாடி வெகுகாலமானபிறகு இவைகள் தொகுக்கப்பட்டிருக்கவேண்டுமென்றும், இதனாலே அவற்றிற்கு இரண்டு மூன்று நூற்றாண்டுகளாவது முன் சென்றிருக்க வேண்டுமென்றும், எழுதுகிறார்கள். இது முழுதும் உண்மையே. புறநானூற்றைப் பார்ப்போமாயின், அதிற் கடைச்சங்கத்திற்கு வெகு காலத்துக்குமுன்னர் வதிந்த புலவரான நெட்டிமையார் என்றொரு புலவர் பஃறுளியாறு என்றொரு ஆறு இருந்தகாலத்தே அரசாண்ட பேரரசனை முதுகுடுமிப்பெருவழுதியைப் பாடிய பாடல்கள் சில தொகுக்கப்பட்டிருக்கின்றன வென அறிவோம். இவன்காலம் வெகு புராதனமானது என்பது அவனை வாழ்த்திக்கூறிய வாழ்த்துச்செய்யுட்களை யூன்றிநோக்கப் புலனாகும். அதனிற் பஃறுளி ஓடியது கூறப்படுகிறது. இந்தப் பஃறுளி ஒருகாலத்திற் கடலாற்கொள்ளப்பட்டதென்றுமாத்திரம் படிக்கிறோமேயொழிய, அது இக்காலமென யாம் திட்டமாயறியோம். இச்செய்தி கதையாகவழங்கும் இக்காலத்தைக் கொண்டு இதன்காலத்தைக் கணிப்பது பேதைமையாகும். ஆயினும், பின்வந்த பாண்டியவரசர் சிலர் இவனைத் தம் முன்னோனாகக்கூறும் சில செப்புப்பட்டயங்களையும் கல்வெட்டுக்களையுங்கொண்டு இவனும் பிற்காலத்தவன் என்று கூசாது கூறிவிட்டனர் பிள்ளையவர்கள்கூட்டத்

தினர். 'தன்குலத்தில் வந்த பெருமைவாய்ந்த முன்னோனொருவனைத் தன் முன்னோனாகப் பின்னோனொருவன் கூறுவது இந்நாட்டில்மாத்திரமன்று; எந்நாட்டிலும் மரபாகலின் இவனும் அதனைப் பின்பற்றினன். இவன்கூறும் வமிசாவளி வாழையடிவாழையாக வந்ததன்று. அதனாலே அவன்காலத்தை யாராயும்போது பாவிற் கூறிய மொழிகள் கொண்டு நிச்சயிக்கவேண்டும். அன்றியும், ஒன்றைப்பற்றியாராயும்போது தாராளமானநோக்கத்துடன் ஆராயவேண்டும். இல்லாவிடின் இடர்ப்படும். ஆகையாலே இத்தொகைநூல்கள் பிற்காலத்தே தொகுக்கப்பட்டதாகக் கொண்டாலும், செய்யுட்களை இயற்றியவர்காலமே நமக்கு வேண்டியதாகும். அவர்கள் எக்காலத்தினர் என்று ஆராயவேண்டும். இவர்களைப் போற்றிய புரவலரும், இவர்கள்காலத்திருந்த பாவலரும் யாவர் எனப் பார்க்கவேண்டும். இவ்வாறு ஆராய்ந்தே கடைச்சங்கமுடிவுகாலம் கி. பி. இரண்டாம்நூற்றாண்டுக்குமேற்படாதென்று ஸ்ரீமான். ராவ்பகதூர் சீனிவாசபிள்ளை, கிருஷ்ணசாமிஐயங்கார்முதலியோர் முடிபுகட்டினார்கள்.

இன்னும், இத்தொகைநூல்களைத் தொகுத்தோர்களை யாராய்வோமாயின் அகநானூறு தொகுப்பித்தான் உக்கிரப்பெருவழுதி; புறநானூறு தொகுத்தார் இன்னாரென்று விளங்கவில்லை; நற்றிணையைத் தொகுப்பித்தவன் பாண்டியன் மாறன்வழுதி; குறுந்தொகை தொகுத்தான் பூரிக்கோ; ஐங்குறுநூறுதொகுப்பித்தான் மாந்தரஞ்சேரலிரும்பொறை; பதிற்றுப்பத்து முழுமையும் அகப்படாமையால் தொகுப்பித்தான் இன்னானென்று விளங்கவில்லை. என்றாலும், அதனில் வந்துள்ள அரசரும் பாடிய புலவரும் கடைச்சங்ககாலத்தவரே. ஆகவே பரிபாடலும் அக்காலத்ததேயாகும். ஆகையால் தொகைநூல்களின்செய்யுட்கள் சங்ககாலத்தனவேயன்றிப் பிற்காலத்தனவாகா.

இனி, ஏழாவதான தென்னிந்தியமக்கள் கல்தேயர்களிடமிருந்து (Chaldeans) சோதிடம் வானசாத்திரம் முதலியவற்றைக் கற்றனரென்று கூறுவதைக் கவனிப்போம். முதலாவதாகக் கல்தேயர்கள் இவ்விதமான சோதிடப்பயிற்சியுடையாரென்று இதுவரை திட்டமாகக் கூறினாரொருவருமில்லை. அவர்களது சோதிடநூல் இத்தன்மைத்து என அறிந்தவரும் ஒருசிலர் இருக்கின்றனரோ இல்லையோ அறிகிலோம்,

சோதிடத்திற்குத் தலே அதுதான் என்று சொல்லிவருகின்றனரே யொழிய அவர்கள் கூறும் பொருளுரை இவையென்று ஒருகிரகத்துக் காவது திட்டமாகக்கூறினர் ஒருவரையும் காணேம். அன்றியும், பிள்ளை யவர்கள் தென்னிந்தியரை ஓரிடத்திற் புகழ்ச்சியாகவும் ஓரிடத்தில் இகழ்ச்சியாகவும் பேசுகின்றனர். அதனலே மிகுதியாக எழுதத் தடையுண்டாகிறது. இவர்களே தமிழ்நூல்களிலிருந்து அவர்கள்காலத்தை எடுத்துக்கொண்டு ஆராய்ந்திருக்கின்றார்கள். அப்படி அவர்கள் தங்கள் பாக்களிற் சோதிடக்குறிகளைப் புகுத்த அந்நூல் வெகு எளிதாக நாட்டிற் பயின்றுவரவேண்டும். அங்ஙனமிராவிடில் அவைகளைப் பெரியார் தம் பாக்களில் அமைக்கமாட்டார்கள். இஃ தன்றித் தமிழநூள் எழுத்துக்களுக்கு நட்சத்திரப்பொருத்தம் அமைத் திருக்கின்றனர். ஒருவன்மீது பாடத்தொடங்குமுன் இவன் ஆரம்பிக் கும் முதற்சொல்லிலுள்ள முதலெழுத்துப் பாட்டுடைத்தலைவனுக்குப் பொருத்தமுள்ளதாக விருக்கவேண்டுமென்று இலக்கணவிதி யிருக் கின்றது. அஃது காட்டுதும்.

ஆவிமுதனன்காலப்பான்
மேவியவைந்தும்வியன்பூராடம்.
மற்றையமூன்றுமுத்திராடம்மே.
ககரவருக்கத்தொருநான்குமிரண்டுந்
திகழ்திருவோணந்திருவாதிரையாம்
பிற்பான்மூன்றுமூன்றும்பேசிற்
பொற்புறுபுணர்தம்பூசமாகும்.
சகரவருக்கந்தனின்முதனன்கும்
புகலுங்காலைப்புருடநாண்மே
லைந்துமூன்றச்சுவினிபரணி.
உற்றஞகாரத்தொருமூன்றினையு
மற்றையவிட்டமாமெனப்பகர்வர்.
மன்னியதகரத்திரண்டேழ்மூன்று
தன்னியற்சோதிவிசாகஞ்சதயம்.
ஆங்குறுநகாரத்தாறுமூன்றுமூன்
ஞேங்கும்பனிதுளங்கொளிபுரட்டாதி.

நற்பகரத்தினுன்கிரண்டாறு
முற்படுமுத்திரங்தொட்டுமென்றே.

ஆறுமூன்றுமூன்றுமகரத்தில்
தேறுமகங்கட்செவியொண்பூரம்.

உற்றயாவொன்றுமுத்திரட்டாதி
யூயோவிரண்டுமேயுமூலம்.

எடுத்தவகரத்திருநான்கிற்கு
மடுத்தரோகணிமான்றலையாகும்.

இறைவன்பெயர்முதலெழுத்ததைநோக்கி
யுறுநாளிணைமூவொன்பதாக்கி
யொன்றுமூன்றைந்தேழொருமுத்திறத்தினு
மொன்றுவண்ணமுறைமுதற்சீர்க்கே.

எட்டாமிராசியும்வைநாசிகமும்

விட்டுமுதற்சீர்விளம்புதன்மரபே. (இலக். பாட்டியல்.)

என்றும், "பிறநூன்முடிபுதானுடன்படுதல் என்னு நியாயநூல்வழக்கால் இறைவன்பெயர்நாட்கு மூன்றும்பரியாயத்தினின்ற மூன்று, ஐந்து, ஏழு பொருத்தமுடையவென்றுகோடலுஞ் சென்மநாள்தொடங்கிப் பொருத்தங்கோடலுங் கொள்க" என்றும் காணப்படுகிறது. இவைக ளெல்லாம் மாமூலர் இந்திரகாளியர் முதலிய பழந்தமிழ்ப்புலவர் கூறிய வைகளைப் பின்பற்றிக் கூறப்படுவனவாம். ஆகாயத்திற் றோன்றும் உடுக்களுக்கும் புவியிலுள்ள மக்களுக்கும் தொடர்புண்டென்றுகொள்ப வர்கள் இந்தியரேயன்றி மேற்றிசையினரென்று கேட்டதில்லை. இவ்வாறு எழுத்துக்களுக்கே இவர்கள் நாட்பொருத்தம் கூறுவார்களாயின் இவர்கள் சோதிடநுட்பம் எவ்வாறு இருந்திருக்குமென ஊகித்துக்கொள்ளலாம்.

இதுவன்றித் தமிழர் புறத்திணைநிகழ்ச்சிகள் ஆரம்பிக்குமுன்னர் விரிச்சியோர்தல், நிமித்தங்கேட்டல் முதலியன உண்டெனப் படிக்கின் றோம். இவைகள் அடிப்பட்ட சான்றோரிடமிருந்து வந்திருக்கவேண்டுமே யல்லது நடுவிற் புகுத்தியிருத்தல் இயலாது. மேலும் நிமித்திகன் கூற்றும் கணியினது சொல்லும் முன்றொட்டு நடந்துவருவவெனப் பழந் தமிழ்நூல்களால் அறிகின்றோம். நிமித்திகன்வாய்மொழியே இப்

பொழுது ஆரூடமாகவும் பிரச்னம்சொல்லுதலாகவும் வழங்கிவருகிற தென்பது ஊன்றிநோக்க விளங்கும். இது முன்னர், செந்தமிழில் வெளியான தென்னாட்டாரும் சோதிடமும் என்ற பொருளுரையைக் கவனித்தாற் றெரியவரும். ஆகையால், தமிழர் கல்தேயர்களிடமிருந்து கற்றனரென்றுசொல்வது பொருந்தாவுரையாகும். ஆனாற் றமிழர் வெகுகாலமாக யவனதேசத்தாருடன் வாணிபம் நடாத்தியவர்களாதலால் இக்கல்தேயரும் சோதிடமறிந்திருப்பார்களாயின் ஒருவருக்கொருவர் கலந்து தங்கள் அறிவை விருத்திசெய்துகொண்டிருக்கலாம். இது இயல்பான காரியமே. மேலும், பிள்ளையவர்களே இத்தமிழர் சௌரமானகாலத்தை விடாமற் பற்றியிருத்தலும், பல உடுக்களின்பெயர்களும் கோள்களும் சுத்தத் தமிழ்ச்சொற்களாலேயே வழங்கப்படுதலும் இவர்கள் சோதிடத்தை வெகுநாளாக அறிந்திருந்தனரென்பதைக் காட்டுமென்கின்றனர். இதைவிட வேறுசான் றென்னவேண்டியிருக்கின்றது. ஆயினும், உரோமதேசத்தில் ஸ்திரீகள் வீடுவிட்டு வெளிச்செல்வதற்குமுன் இந்திய நிமித்திகர்களைக்கொண்டு நிமித்தங்கண்டு புறப்பட்டனர் என்ற ஜூவினல் வசைப்பாட்டடிகளை எடுத்துக்காட்டி நிமித்தம் சோதிடத்தின்பாற்படா தென்கின்றனர். முன்னர் நிமித்தமே ஆரூடமென்றும். இதற்குக் கேர்ணிலைகள் தெரியவேண்டுவது இன்றியமையாததாகும். இப்பொழுது நம்நாட்டு வள்ளுவமுதுமகாரிற் பலர் இந்நிமித்தங்களைக்கண்டு நடக்கப்போகும் பல பெருங்காரியங்களை முன்னமே தெரிவிக்கின்றனரென்பது எல்லோரு மறிந்ததே. ஆங்கில விற்பன்னர்கள் பலரும் எல்லாக்கலைகளும் மேனாட்டிலிருந்துவந்தனவென்ற கொள்கையுடையராய்ப் பிழைபாடுறுகின்றனர். கம்பர்கருத்தே ஷேக்ஸ்பியர்மகாகவியிற் காணப்படுகிறதெனுல் இவர் அவர் எழுதியதைப் படித்தறிந்து பின்னர்ச் செய்யுளியற்றினரென்று கொள்வதா? அவரவர்கள் புத்திக்கெட்டியதை யவரவர்கள் எழுதியிருக்கலாமேயொழிய ஒருவரையொருவர் பார்த்து எழுதினரென்பது பொருந்தாவுரையாவது போல இதுவும் ஆம். இதைத் தவிர்த்து வேறுவிதமாகவிருக்க நியதியில்லை. காலவாராய்ச்சியாளர் தென்னாட்டிற் சாதகம் குறிக்கும் வழக்கம் மத்தியகாலத்தில் வந்ததேயொழியப் பழையகாலத்தி லில்லையென்கின்றனர். இவர்களே புறநானூறுமுதலான நூல்களிலிருந்து எடுத்துக்காட்டி பாராய்ந்திருப்பதால், இது பயனில்கூற்றாகும். ஆகவே கல்தேயர்க

ளிடமிருந்துதான் தமிழர் இக்கலையைக் கற்றார்களென்பதற்குப் போதிய வாதாரங் காட்டப்படவில்லை. அதற்கு மாறாகத் தமிழர் சோதிடக்கலையைத் தொன்றுதொட்டுத் தமது நூல்களிற் புகுத்திவந் திருக்கின்றனரென்று காட்டப்பட்டது.

இனி முதலாவதான முன்னோர் மத்தியகணிதமறிந்திருந்தனரே யொழிய அதனிலேற்படும் வாக்கியப்பிழைகளைத் தீர்க்க வகையறிந்திலர் என்பதைக் கவனிப்போம். இவர்கள் அதற்குப் போதிய ஆதாரம் காட்டி னார்களில்லை. அவர்கள் அறிந்திருக்க வியலாதென்பது மாத்திரம் தகுதியாகாது. அதற்குத் தக்க சான்று வேண்டும். அன்றியும், சூரிய சந்திரர்களுககு வாக்கியப்பிழைதீர்த்தபிறகே உண்மைநிலை ஒற் றுமைப்பட்டுநிற்கக் காண்கிறோம். இப்படிச் சூரியசந்திரர்கள்மட்டும் ஒற்றுமைப்படும்போது மற்றைக்கோள்கள் ஒற்றுமைப்படவில்லையென் பது எப்படிப்பொருந்தும்?. மேலும், முன்னோர் அறிந்த பலவிடயங் களை நா மறியவில்லையென்று ஒரு உதாரணத்தாற் காட்டுகிறேன். இப் பரிபாடற்பாட்டில் அகத்தியரைபபற்றிக் கூறியிருக்கிறது. இதுவரை நண்பர் பலர் அகத்தியர் என்று ஒரு கோளிருப்பதைக்கூடச் சந்தேகித் தனர். அதற்கு நித்திய கதியும், சலனமும், உண்டென்று புராணங்களிற் சொல்லப்பட்டிருக்கிறதென்று காட்டப்பட்டது. இதனைப்பற்றி ஆசார்ய வாராஹமிஹிரர் தமது பிருகத்சம்ஹிதையில் இருபத்தொருசுலோகங்க ளடங்கிய ஒரு அத்தியாயம் (XII) சொல்லியிருக்கின்றனரென்றால் அதன் நிகழ்ச்சிகளை இப்பொழுது அறிந்தார் இலரெனறே கூறவேண்டி யிருக்கிறது. அன்றியும், அவரது சுலோகங்களுக்கு எளிதிற் பொருள் காண வியலவில்லையென்று உரைகாரர் கூறுகின்றனர். இவ்வாறு முன் னோர் அறிந்த பலவிடயங்களை நாமறியாமலிருக்கும்பொழுது அவர்கள் இப்பொழுதுள்ளமுறையை அறிந்திரார் என்பது பொருந்தாவுரையாகும்.

இனி இவர்கள் பரிபாடலுடையார்கூறுகின்றபடி சுக்கிரனைக் கண்டிருக்கமுடியாதென்பதைப்பற்றி யாராய்வோம். ஆசிரியர் நல்லந் துவனார் வெள்ளி இடபத்திலிருக்க வென்று கூறுகின்றார். கார்த்திகை உச்சமாகும்போது அதற்குக் கீழ் ஆறுநட்சத்திரங்களும் மேல் ஆறு நட்சத்திரங்களும் ஆகாயத்திற் றோன்றுமென்றும், உதயமீனுக்கு உச்ச மீன் அறமீன், உச்சமீனுக் கத்தமீ னறுமீனென்றும் பெரியார் கூறுப

வாகலின், திருவாதிரை உதயமாகி வெகுநேரமாயிருக்கவேண்டும். அப்பொழுது உடனெழும் வெள்ளி தோன்றுதல் இயல்பே. இதனில் ஆகாத தொன்றையும் காணோம்.

மேல் ஐந்தாவதான புதசுக்கிரர்கள் இப்பாட்டுக்கு முக்கிய மில்லை என்பது பொருத்தமானதில்லை. இவர்கள், புதசுக்கிரர்கள்கதி சூரியனுடைய சலனத்துக்குத்தக்கபடி இருக்கும் என்னும் தற்கால கணிதப் போக்கின்படி கூறுகின்றார்களேயன்றி இரண்டாயிரவருடங்கட்கு முன்னர் எவ்வாறு கணித்தார்களென்று அறிந்து சொல்லவில்லை. தாங் கொண்ட கணிதத்திலுங்கூடச் சநியின்கதி மாறுபடுவதைச் சுட்டி அக்காலத்துக் கணிதமுறை தெரிந்திலது என்று இவர்களே எழுதுவதால் இப் புதசுக்கிரர் அவசியமில்லை என்பது பொருந்தாது. ஆனால் அவர்கள் கணிதமுறையை யா மறிவதற்கில்லை. ஆதலால் நம்மாற் கணிக்கமுடியவில்லை என்பதைத் தவிர்த்து வேறுவிதமாகக் கூறுதலடாததாம்.

இனிப் பதின்மூன்றாவதான இவர்களது கி. பி. 634-ம்வருடத்தை யாராய்வாம். முன்னர் இக்காலம் தென்னிந்தியாவில் எப்படி இருந்ததென்று கவனிப்பாம். கடைச்சங்ககாலங் கடந்து பன்னெடுநாளாகிப் பல்லவர் அரசாண்டகாலம், மகேந்திரவர்மன் முதலாம்நரசிம்மவர்மன் முதலாபவர் அரசாண்டகாலம். அப்பொழுது சமண பௌத்த மதம் அழியத்தலைப்பட்டுச் சைவமதம் மறுபடி வேரூன்ற ஆரம்பித்தகாலம். கல்வெட்டுக்களும் செப்புப்பட்டயங்களும் காணப்படுகின்றகாலம். இப்படிப்பட்ட பெருமைபொருந்தியவிடயமொன்று இருக்குமானால் அது ஏதாவதொரு இடத்தில் எழுதிவைக்கப்பட்டிருக்கும். ஆகவே இந்நாட்கு இவைகளெல்லாம் தடைகளாக விருக்கின்றன.

இனி, இந்நாளிற் கோள்கள் இவர்கள் கூறுகிறபடி இருந்தனவாவெனக் கணித்துப்பார்ப்போம். இவர்கள்நூற்படி கி. பி. 634-க்குக் கதகலி அப்தம் 3735. அன்று வருஷப்பிரவேசம் விடிந்து 1நாழிகை 27விநாடி 30தற்பரையாகும். இவர்களும் ·0243 என்று கண்டிருக்கிறார்கள். இந்தவ்ருடம் ஆங்கிலக்கணக்குக்கு மார்ச்சுமீ 20உ பிறந்திருக்கிறது. இவர்கள் குறிக்கும் நாள் சூன்மீ 17உ. அதற்கு மார்ச்சு 12நாள், ஏப்பிரல்30நாள் மே31நாள் சூன்16நாள் ஆகக் கூடியது 89.

நமக்குவேண்டியது 17ம்தேதியாகையால் 16ம்தேதிக்குக் கணக்கிடுவோமானல் மறுநாள் உதயமே கிடைக்கும். இதனாலே 89நாள் கணக்கிட்டோம். ஆக இதற்குக் கலி பிறந்து 1364328நாளாகிறது. அன்று சூரியன் இராசி 2 பாகை 25 கலை 31 விகலை 31ல் இருக்கிறான். சந்திரனுக்குக் கணனம்செய்ய, கலியுகநாளான 1364328ஐ600ல் பெருக்க வருவது 818596800. இதனை 66393க்கு ஈந்து வந்த மிகுதியை 12ற் பெருக்கி மேற்கூறிய வகுக்குமெண்ணால் வகுத்துவந்தமிச்சத்தை 30, 60, 60ற் பெருக்கி வகுக்க வருவது ராசி பாகை கலைகளாம். இவ்விதமாகச் செய்யக் கிடைத்தது ராசி 9 பாகை 1 கலை 6 விகலை 12. இதற்குமேல்1364328ஐ வைத்து 2920க்கு ஈந்துவந்த ஈவு கலை; மிகுதியை 60ற் பெருக்கி 2920-க்கு ஈயவருவது விகலை. இவைகளை முன்கண்ட ராசி பாகைகளிற் கழிக்க (ராசி 9 பாகை 1 கலை 6 விகலை 12-பாகை 7 கலை 47 விகலை 51) மிகுதியாவது ராசி 8 பாகை 23 கலை 18 விகலை 21. இதனோடு துருவமான இராசி 6 பாகை 19 கலை 17 விகலை 27 கூட்டச் சந்திரமத்தியமாம். ஆகக் கூடியது இராசி 3 பாகை 12 கலை 35 விகலை 48: இதுவே சந்திரமத்தியம். இனி இதனது சுத்தஸ்புடம் காணத் துங்கமத்தியத்தைக் கழித்து வாக்கியப்பிழைதீர்க்கவேண்டும். இதுவே சுத்தஸ்புடம் அல்லது உண்மைநிலையாகும். அப்படிக் கிடைத்தது இராசி3 பாகை7 கலை36 விகலை48. இதற்கு அன்று தினக்குறிப்பு வருமாறு :—

இங்கிலீஷ் கி. பி. 634 ஜுன் 17 அல்லது 17-6-634க்கு வர்த்தமானகலி 3736ம் ஆண்டு(நாள்90க்கு) ஆனிமீ 28உ வெள்ளிக்கிழமை சுக்கிலபட்சத்து திதி 55 நாழிகை 2விநாடி பூசம்41–38 என்று காணப்படுகிறது. முதல்நாள் பிரதமை59-23 புனர்பூசம் 40-43 என்று காணப்படுகிறது. ஆகையினால் இவர்கள் சொல்லுகிற பூரணையான நிறைமதிவரப் பின்னும் பதின்மூன்றுநாள்வேண்டியிருக்கிறது. இந்த நாளை இவர்கள் எவ்வாறு கண்டார்களோ அறியக்கூடவில்லை. என் கணக்குப் பிழையெனறுகூறுவார்களோவென்றுநான் கணிதத்தைச் செய்துகாட்டியுள்ளேன். அவர்கள் தங் கணக்கை நிரூபிக்கும்வரை அந்நாள் ஒற்றுமையுடையதல்லவென்றே கொள்ளலாம். முதலில் வேண்டிய பூர்ணிமை யில்லாமையினாலேயே மற்றைக் கிரகங்களைச் சோதிக்காமல் விட்டுவிட்டேன்.

இனி 27-7-17 ஆன கலி 3119 ஆவணிமீ த்துக்கு இவர்கள், அந்நாள் சங்ககாலமல்லவென்றும் (2) அன்று கிரகணம் முன்னிரவில் இருந்ததென்றும் ஆசிரியர் விடியற்காலையில் கிரஸ்தாஸ்தமனமாக இருந்ததென்று கூறியிருக்கிறாரென்றும் ஆட்சேபணை கூறுகிறார்கள். முதலாவது ஆட்சேபத்திற்கு டாக்டர் எஸ். கிருஷ்ணசாமிஐயங்கார் போன்ற சரித்திரஆராய்ச்சிக்காரர்களது அபிப்பிராயமே ஒத்துக்கொள்ளக்கூடியதேயொழியப் பிள்ளையவர்கள் சொல்வது சரித்திரவேற்றுமையுடையதாகின்றது. இரண்டாவதான கிரகணத்தைப்பற்றி ஆசிரியர் பாம்பு ஒல்லை மதிய மறையவரும்நாளில் என்றார்களே யொழிய அவர் கிரஸ்தாஸ்தமனமென்று கூறவில்லை. அன்று கிரகணமென்று கூறுவதன்றிப் பாதாளக்ரஹணமென்பதற் குரிய சொல் ஒன்றுமில்லை. அப்படியிருந்தால் அதனைக் கூறியிருப்பார். இவர்களுக்கு இந்நாள் பிடித்தமில்லையாயின், கிமு 161 ஆன கலி2941*ஐக் கவனிப்பாம். அன்று பிள்ளையவர்களே கிரகணமுண்டென்று கூறுகின்றார்கள். இந்நாளை இவர்கள் ஆராயவே இல்லை. வர்த்தமானகலி2941க்குப் பிரமாதி௵ ஆவணிமீ 12உ வியாழக்கிழமை சதுர்த்தசி 15-4 அவிட்டம் 45-33 என்று காணப்படுகிறது. அன்று பாட்டிற்கண்டபடி நிறைமதிநாளான அவிட்டநாளாகிறது. அற்றைநாளிற் சூரியன் சிம்மத்திலும் சந்திரன் மகரத்திலும், செவ்வாய் இவர்கள்கூறியபடி கடகத்திலும், புதன் மிதுனத்திலும், சுக்கிரன் மிதுனத்தின் இரண்டாம் பாகையிலும், சனி மகரத்திலும், குரு கும்பத்திலும் காணப்படுகின்றனர். ஆசிரியர் கூற்றுக்குச் செவ்வாயும் குருவும் பிறழ்ச்சியுடையாராகக் காணப்படுகின்றனர். முன்கூறியபடி அக்கால கணிதநிலையைத் துணிந்துகூறற்குப் போதிய கருவிகள் இக்காலத்தி வில்லையாகலாற் சற்றேறக்குறையப் பொருந்துகின்ற நாளையே கொள்வதே அமைவுடையது. ஆயின் இவர்கள் கிபி 17ம் ஆண்டையே ஏற்கவில்லை. இவ்வாண்டா ஏற்கும். இவர்களுக்கு இவ்வாண்டு ஒவ்வாதாயினும் தமிழர்பலரும் இதனை யொப்புவார்களென்பதில் ஐயமில்லை. இதற்கு மற்றொருசான்றும் கூறுவாம். கரிகாலனுடையகாலமாகப் பின்வரும் செய்யுளொன்று சோழமண்டல சதகத்திற் காணப்படுகிறது. அது வருமாறு:—

* இந்தவருஷம் ஆடிமீ 30உ உண்டான கிரகணத்தையும் கவனிக்க, இதனைப்போன்றே அக்காலத்தும் சம்பவித்திருக்கவேண்டும்,

*"தொக்ககலியின்மூவாயிரத்துத்தொண்ணூற்றில்
மிக்ககரிகால்வேந்தனுந்தான்—பக்க
மலைக்கும்புகழ்ப்பொன்னியாறுகரையிட்டான்
மலைக்கும்புயத்தானுவந்து."

[இதனில் முதல்வரியில், 'தொக்கசகனிற்றெளாயிரத்து' என்றொரு பாடமுண்டாயினும் அது பழைய ஏடுகளிற் காணப்படவில்லை.]

இப்பாடலோடு பின்வரும்பாடலையும் சேர்த்து வாசிப்போமாயின், கரிகாலனதுசெய்திகள் பல புலப்படும். அவை வருமாறு:—

*"அஞ்சிலேமுடிகவித்துஐம்பத்துமூன்றளவில்
விஞ்சுகாவிரிகரைகண்டு—தஞ்சையிலே
எண்பத்துமூன்றளவுமாண்டிருந்தான்
விண்புக்கான்தனிப்புக்கான்வேந்து."

ஆகவே இப்பாக்களினால், கரிகாலனதுகாலம் உறுதிப்படுமானல் இவைகட்கு ஒருநூற்றாண்டுக்குமுன்னர் இது சம்பவித்திருக்கலாமென்று கொள்வதும் தவறாகாது. எவ்வாறாயினும் பிள்ளையவர்கள் கொண்ட 6`4ம்-ஆண்டு பொருந்ாதென்போம்.

(தொடரும்)

இலக்கணவிளக்க பரம்பரை

திருவாரூர் சோமசுந்தரதேசிகன்.

---

*மதுரைத்தமிழ்ச்சங்கத்துச்சைவநூற்பரிசோதகரும் திருவாடுதுறையாதீனவித்துவானுமான ஸ்ரீமத். சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்களிடமுள்ள பழையகையெழுத்துப்பிரதியில் இப்பாடல்கள் பின்வருமாறு காணப்படுகின்றன:— உதவிப்பத்திராதிபர்.

தொக்ககலியிற்றெளாயிரத்துத்தொண்ணூற்றில்
மிக்ககரிகாலவேந்துதித்துத்—தக்கபொன்னி
யாறுகரைகண்டான்பின்னுதொண்டைவேந்துகச்சி
யூருகண்டான்வேளாளருற்று.

அஞ்சின்முடிபூண்டேயைம்பத்துமூன்றுவரை
கஞ்சிகாவேரிகரைகண்டு—தஞ்சையிலே
எண்பத்துமூன்றுடனேயீரிரண்டாளிருந்தான்
நண்புறுமாதொண்டைமன்னன்நாள்.

பாண்டியன்யானை.

517. உருவத்தார்த் தென்னவ னேந்தெழில் வேழத்
திருகோடுஞ் செய்தொழி லெண்ணி—னொருகோடு
வேற்றா ரகல முழுமே யொருகோடு
மாற்றார் மதிற்றிறக்கு மால்.

518. மருப்பூசி யாக மறங்கனல்வேன் மன்னர்
உருத்தகு மார்போலை யாகத்—திருத்தக்க
வையக மெல்லா மெமதென் றெழுதுமே
மொய்யிலைவேன் மாறன் களிறு.

519. அடுமதில் பாய வழிந்தன கோட்டைப்
பிடிமுன் பழகழித நாணி—முடியுடை
மன்னர் குடையான் மறைக்குமே செங்கனல்வேற்
றென்னவர் கோமான் களிறு.

520. தோற்ற மலைகட லோசை புயல்கடாஅங்
காற்றி னிமிர்ந்த செலவிற்றாய்க்—கூற்றுங்
குறியெதிர்ப்பை கொள்ளுந் தகைமைத்தே யெங்கோன்
எறிகதிர்வேன் மாறன் களிறு.

521. கையது கையோ டொருதனி கோட்டது
மொய்யிலைவேன் மன்னர் முடித்தலை—பைய
உயர்பொய்கை நீராட்டிச் செல்லுமே யெங்கோன்
வயவெம்போர் மாறன் களிறு.

களப்பாளன்யானை.

522. படுபெருந்துஞ் சூர்ப்பேயும் பல்விலங்குஞ் செந்நாய்
கொடிகழுகு மின்னவெலாங் கூடி—வடிவுடைய
கோமான் களப்பாளன் கொல்யானை போமாறு
போமாறு போமாறு போம்.

யானைநிலை.

523. ஆர்த்தார்த்துக் கண்சேந்து வேர்த்து விரைந்துதன்
பொன்னோடை யானையின் மேற்கொண்டா னென்னுங்கொல்
மன்ன ருறையு [1]மதில்.

524. மட்டுத்தா னுண்டு மதஞ்சேர்ந்து வீட்டுக்
களியானை கொண்டுவா வென்றான் களியானைக்
கியாரோ வெதிர்நிற் பவர்.

(517—520) முத்தொள்ளாயிரம். (521) தொல். பொரு. 72. நச்.
(522) தனிப்பாட்டு. (523, 524) யாப். வி. 94, [1]மெயில்.

525. ஒருகை யுடைய தெறிவலோ யானும்
இருகை சுமந்துவாழ் வேன்.

குதிரைநிலை.

526. முற்குளம்பி னுற்கிளறி மோந்தங்கோர் முக்காலும்
பொற்சுண்ண மாடிப் புரண்டெழுந்து—நற்சென்னி
நேர்நிறுத்தி நின்றுதறிக் கங்கைநீ ருண்டனவே
பானிறத்த மால்வெண் பரி.

527. பல்லுருவக் [1]காலின் பரியுருவத் தாக்கித்தன்
தொல்லை யுருவிழந்த தோற்றம்போல்—எல்லா
மொருகணத்துத் தாக்கி யுருவிழந்த பாய்மாப்
பொருகளத்து வீழ்ந்து புரண்டு.

மாவளவன்குதிரை.

528. சாலியரி சூட்டான் மடையடைக்கு நீர்நாடன்
மாலு மழைத்தடக்கை மாவளவன்—காலியன்மா
மன்னர் முடியுதைத்து மார்பகத்துப் பூணுழக்கிப்
பொன்னுரைகற் போன்ற குளம்பு.

பாண்டியன்குதிரை.

529. நிரைகதிர்வேன் மாறனை நேர்நின்றார் யானைப்
புரைசை யுறமிதிர்த்து பொங்கா—வரசர்த
முன்முன்னு [2]வீழ்ந்த முடிக ளுதைத்தமாப்
பொன்னுரைகற் போன்ற குளம்பு.

போர்த்தொழில்.

530. சேந்தன வேந்தன் திருநெடுங்கண் டெவ்வேந்தர்
வந்து தடந்தோ ளிழிகுருதி—பாய்ந்த
திசையனைத்தும் வீரச் சிலைபொழிந்த வம்பும்
மிசையனைத்தும் புட்குலமும் வீந்து.

531. செம்மை யுடையார் சிறியார்மேற் சொல்லுஞ்சொல்
வெம்மை யுடைய விறற்பகழி—தம்வன்மை
காவிட்டா னென்னுது காய்ந்தவர்மேற் பாய்ந்தனவே
மேவிட் டுயிர்போக மிக்கு.

---

(525) தொல். பொரு. 254. (526) வீரசோ. அலங். 10. மேற். (527) தொல். பொரு. 72. நச். [1]காரி. (528) ஷை. ஷை. 36. (529) முத்தொள்ளாயிரம், [2]வீழ்ந்தார். (530) தண்டி. 38. (531) வீரசோ. அலங். 12 மேற்.

532. குழாக்களிற் றரசர் குறித்தெழு கொலைக்களம்
விழாக்களம் போல மெய்ம்மலி யுவகையர்
ஆண்மை யுள்ளங் கேண்மையிற் றூரத்தலின்
அழுந்துபடப் புல்லி விழுந்துகளம் படுநரும்
நீர்ப்பெயற் பிறந்த மொக்குள் போலத்
தாக்கிய விசையிற் சிதர்ந்துநிலம் படுநரும்
தகருந் தகருந் தாக்கிய தாக்கின்
முகமுகஞ் சிதர முட்டு வோரும்
முட்டியின் முறைமுறை குத்து வோரும்
கட்டிய கையொடு காறட் குநரும்
கிட்டினர் [1]கையற் றெட்டிநிற் போரும்
சுட்டிய பெயரை [2]விட்டழிப் போரும்
சக்கரம் போலச் சங்குவிட் டெறிநரும்
சிலைப்புடை மூரசிற் றலைப்புடைக் குநரும்
மல்லிற் பிடித்தும் வில்லி னெற்றியும்
ஊக்கியு மூரப்பியு நோக்கியு நவன்றும்
போக்கியும் புழுங்கியு நாக்கடை கவ்வியும்
எயிறுடன் றிருகியுங் கயிறுபல வீசியும்
இனைய செய்தியின் முனைமயங் குநரும்
பிறப்பும் பெருமையுஞ் சிறப்புஞ் செய்கையுஞ்
அரைசறி பெருமையு முரைசெ லாண்மையும்
உடையோ ராகிய படைகொண் மாக்கள்
சென்றுபுகு முலக மொன்றே யாதலின்
ஒன்றுபடு மனத்தொடு கொன்றுகொன் றுவப்பச்
செஞ்சோற்று விலையுந் தீர்ந்துதம் மனைவியர்
தம்பிணந் தழீஇ நொந்துகலுழ்ந் திரங்கவும்
புதுவது வந்த மகளிர்க்கு
வதுவை சூட்டிய வான்படர்ந் தோரே.

ஓடாப்படையாண்மை.

533. மாநாக முன்னுயர்த்தான் சேனை களமுழுதுந்
தானு வருமதனைத் தாங்கினான்—மேனாள்
அருகணையா வண்ண மடற்போரின் வென்று
வருகணையாற் பெற்ற மகன்.

(532) தொல். பொரு., 72 நச். [1]கையிற் றெட்டிநிற்போரும். [2]விட்டழைப் போரும். (533) வீரசோ. பொருட். 15.

மெய்யாற்பொருதல்.

534. கொல்லேறு பாய்ந்திறுத்த கோடுபோற் றண்டிறுத்து
மல்லேறு தோள்வீமன் மாமனைப்—புல்லிக்கொண்
டாரூத போர்மலைந் தாங்கரசர் கண்டார்த்தார்
ஏரூட லாய ரென.

களிறெறிந்தெதிர்ந்தோர் பெருமை.

535. இடியா னிருண்முகிலு மேறுண்ணு மென்னும்
படியாற் பகடொன்று மீட்டு—வடிவே
லெறிந்தார்த்தார் மள்ள ரிமையாத கண்கொண்
டறிந்தார்த்தார் வானோரு மாங்கு.

536. இருபாற் சேனையு நனிமருண்டு நோக்க
முடுகியற் பெருவிசை யுரவுக்கடுங் கொட்பின்
எண்டிசை மருங்கினு மெண்ணிறைந்து தோன்றினும்
ஒருதனி யனுமன் கையகன்று பரப்பிய
வன்மரந் துணிபட வேறுபல நோன்படை
வழங்கி யகம்பன் றேள்படை யாக
ஒச்சியாங் கவனு முன்கையி னழுத்தலிற்
றனஅது வன்றலை யுடல்புக்குக் குளிப்பக்
கரிந்துயிர் போகு செந்நெறி பெருமையிற்
பொருகளத்து நின்றன நெடுஞ்சேட் பொழுதே.

537. பருதிவேன் மன்னர் பலர்காணப் பற்றூர்
குருதிவாள் கூறிரண்டு செய்ய—ஒருதுணி
கண்ணிமையா முன்னங் கடிமதிலுள் வீழ்ந்ததே
மண்ணதே மண்ணதே யென்று.

538. அறத்திற் பிறழ வரசெறியுந் தானை
மறத்திற் புறங்கண்டு மாறூன்—குறைத்தடுக்கிச்
செல்லுங்காற் காட்டுத்தீச் சென்றாங்குத் தோன்றுமே
பல்படையார் பட்ட படி.

539. சென்ற வுயிர்போலத் தோன்று முடல்சிதைந்தோன்
நின்ற வடிபெயரா நின்றவை—மன்ற
லரமகளிர் மங்கலத்திற் காங்காங்கு வைத்த
மரவடியே போன்றன வந்து.

---

(534) தொல். பொரு. 72. நச். (535) ஷை; பெரும்பொருள்வி. (புறத்). (536) ஆசிரியமாலை (புறத்). (537) தொல். பொரு. 71 நச். (538,539) ஷை. 72.

அட்டையாடுதல்.

540. வான்றுறக்கம் வேட்டெழுந்தார் வாண்மறவ ரென்பதற்குச்
சான்றுரைப்ப போன்றன தங்குறை—மான்றேர்மேல்
வேந்து தலைபனிப்ப விட்ட வுயிர்விடாப்
பாய்ந்தன மேன்மேற் பல.

இருவருந்தபுநிலை.

541. அறத்துறைபோ லாரெயில் வேட்ட வரசர்
மறத்துறையு மின்னுது மன்னே—நிறைச்சுடர்கள்
ஒன்றி வரப்பகல்வா யொக்க வொளிதேய்ந்தாங்
கின்றிவர் வீழ்ந்தா ரெதிர்ந்து.

வாளோராடும் அமலை.

542. ஆளுங் குரிசி லுவகைக் களவென்னுங்
கேளன்றிக் கொன்றூரே கேளாகி—வாள்வீசி
ஆடினு ரார்த்தா ரடிதோய்ந்த மண்வாங்கிச்
சூடினுர் வீழ்ந்தானைச் சூழ்ந்து.

எருமைமறம்.

543. சீற்றங் கனற்றச் சிறக்கணித்துச் செல்லுங்கால்
எற்றெருமை போன்ரு னிகல்வெய்யோன்—மாற்றான்
படைவரவு [1]காத்துத்தன் பல்படையைப் பின்காத்
திடைவருங்காற் பின்வருவார் யார்.

வாகை.

குதிரைப்பாசறை.

544. மூதில்வாய்த் தங்கிய முல்லைசால் கற்புடை
மாதர்பாற் பெற்ற வலியளவோ—கூதிரின்
வெங்கண் விறல்வேந்தன் பாசறையுள் வேனிலான்
ஐங்கணை தோற்ற வழிவு.

அவிப்பலி.

545. நச்சிலைவேற் காளைக்கு நாளையே கொற்றவை
கைச்சிலையு நல்கும்யாங் காணேங்கொல்—மிச்சில்கூர்
வாளின்வாய்த் தீண்டாத வார்குருதி மெய்சாய்ப்பத்
தாளின்வாய் வீழ்த்தான் றலை.

---

(540) தொல். பொரு. 71 நச். (541) ஷை. 68 நச். (542) பெரும்பொருள்வி (புறத்); தொல். பொரு. 72 மேற். (543) தொல். ஷை. [1]பார்த்துத்தன் பல் படையைக்காத்துய்த். (544) பெரும்பொருள்வி (புறத்). (545) சிலப். காதை 12. பக். 331.

களவேள்வி.

546. வென்று களங்கொண்ட வேந்தன்றேர் சென்றதற்பின்
கொன்ற பிணநிணக்கூழ்க் கொற்றவை—நின்றளிப்ப
உண்டாடு பேய்கண் டுவந்தனவே போர்ப்பரிசில்
கொண்டா டினகுரவைக் கூத்து.

547. மரகதப் பூண்மன்னர் தோள்வளை [1]கீழா
வயிரக் கடகக்கை வாங்கித்—துயருழந்து
புண்ணுற் றழைக்குங் குறுநரித்தே பூழியனைக்
கண்ணுற்று வீழ்ந்தார் களம்.

548. முடித்தலை வெள்ளோட்டு மூளைநெய் யாகத்
தடித்த குடர்திரியா மாட்டி—யெடுத்தெடுத்துப்
பேஎய் விளக்கயரும் பெற்றித்தே செம்பியன்
சேஎய் பொருத களம்.

549. ஏனைய பெண்டி ரெரிமூழ்கக் கண்டுதன்
றானையாற் கண்புதைத்தான் றார்வழுதி—யானையெலாம்
புல்லார் பிடிபுலம்பத் தாங்கண் புதைத்தவே
பல்வாயார் பட்ட களத்து.

550. வெருவரு வெஞ்சமத்து வேலிலங்க வீழ்ந்தார்
புருவ முரிவுகண் டஞ்சி—நரிவெரீஇச்
சேட்கணித்தாய் நின்றழைக்குஞ் செம்மற்றே தென்னவன்
வாட்கணித்தாய் வீழ்ந்தார் களம்.

பகையிடமழிதல்.

551. கொல்லியம் பொருப்பனை மேவார் கோநகர்
இல்லெரி மேவுவ தியம்ப வேண்டுமோ
வல்லியந் தாமரை வனங்க ளாயின
வல்லியந் தாமரை வனங்க ளாயின.

வென்றி.

552. கொடித்தலைத்தார் மன்னவன் றேற்றான்போ னின்றான்
மடித்தவாய் சுட்டிய கையாற்—பிடித்தவேல்
கண்ணோரா வோச்சிக் களிறணையாக் கண்படுத்த
மண்ணோரா மன்னரைக் கண்டு.

---

(546) பெரும்பொருள்வி(புறத்). (547-550) முத்தொள்ளாயிரம். [1]கீளா.
(551) தண்டி. 94. (552) முத்தொள்ளாயிரம்.

553. தொழிறேற்றுப் பாலகனை முன்னிறீஇப் பின்னின்
றழலிலைவேல் காய்த்தினார் பெண்டிர்—கழலடைந்து
மண்ணீத்த லென்ப வயங்குதார் மாமாறன்
கண்ணீத்தந் தீர்க்கு மருந்து.

திறை.

554. பல்யானை மன்னர் படுதிறை தந்துய்ம்மின்
மல்ல னெடுமதில் வாங்குவிற் பூட்டுமின்
[1]வல்லிதழ் வாடாத வானோரும் வானவன்
வில்லெழுதி வாழ்வர் விசும்பு.

555. நேமி நிமிர்தோ ணிலவுதார்த் தென்னவன்
காமர் நெடுங்குடைக் காவ லணையால்
ஏம மணிப்பூ ணிமையார் திருந்தடி
பூமி மிதியாப் பொருள்.

556. நிறைமதிபோல் யானைமே னீலத்தார் மாறன்
குடைதோன்ற ஞாலத் தரசர்—திறைகொள்
இறையோ வெனவுந் திடம்பெறாத வின்றி
முறையோ வெனநின்றார் மொய்த்து.

557. நின்றீமின் மன்னீர் நெருநற் றிறைகொணர்ந்து
முன்றந்த மன்னர் முடிதாக்க—வின்றுந்
திருந்தடி புண்ணாகிச் செவ்வி யிலனே
பெருந்தண் ணுறந்தையார் கோ.

அறிவன்வாகை.

558. வாய்மை வாழ்நர் மூதறி வாள
நீயே யொருதனித் தோன்ற லுறைப்பி
யாருமி லொருசிறை யானே தேரின்
அவ்வழி வந்தநின் னுணர்வுமுதற் றங்குந்
தொன்னெறி மாயினு மூவகை நின்றன
காலமு நின்னொடு வேறெனை
யாரோஃ பெருமநிற் றேர்கு வோரே.

(553—557) முத்தொள்ளாயிரம். [1]வள்ளிதழ். (558) தொல். பொரு. 75, மேற்.

பாடாண்.

அரசன் சிறப்பு.

559. மின்னார் மணிப்பைம்பூண் வேந்தே நினக்குலகில்
இன்னா தவர்யாரு மில்லையால்—ஒன்னார்
குலமுழுதுங் கூற்றங் கொளவெகுண்டு நீயே
தலமுழுதுந் தாங்க றகும்.

560. விண்ணின்மேற் காவல் புரிந்துறங்கான் விண்ணவர்கோன்
மண்ணின்மே லன்னை வயவேந்தே—தண்ணளியிற்
சோரா வவுணர் திறங்களையுந் தேவர்கோன்
நேரார்மே லத்தகையை நீ.

செங்கோற் சிறப்பு.

561. [1]சிறைபடுவ புட்குலமே தீம்புனலு மன்ன
இறைவநீ காத்தளிக்கு மெல்லை—முறையிற்
கொடியன [2]குன்றத்தின் மாளிகையே யன்றிக்
கடியவிழ்பூங் காவு முள.

562. வெண்ணீர்மை தாங்குவன முத்தே வெளியவாய்க்
கண்ணீர்மை சோர்வ கடிபொழிலே—பண்ணீர
மென்கோவி யாழே யிரங்குவன வேல்வேந்தே
நின்கோ [3]னிலவு நிலத்து.

மன்னர்திறம்.

563. உறையு மிடமன்றே பாரெலா மும்பர்
[4]நெறியு நிலாமுற்ற மன்றே—சிறுவாய்க்கா
லற்றன்றே மூந்நீ ரகன்றுயர்ந்த மாமேரு
புற்றன்றே நீமுனிந்த போது.

(பொய்கையார்)

564. அவிழ்ந்த துணியசைக்கு மம்பலமுஞ் சிக்கும்
மகிழ்ந்திடுவார் முன்ன மலரும்—கவிழ்ந்து
நிழறுழா யானை நெடுமான்றேர்க் கிள்ளி
கழறொழா மன்னர்தங் கை.

---

(559) தண்டி. 100 மேற்; வீரசோ. (560) ஷை. 30. (561, 562) ஷை. 75; வீரசோ. அலங். 30 மேற். [1]சிறைபயில்வ. [2]மாளிகையின் குன்றமே [3]ஹுலவு, (563) வீரசோ, பொருட். 15 மேற். [4]உலவு. (564)யாப், வி. 36,

கண்படைநிலை.

565. வாய்வாட் டானை வயங்குபுகழ்ச் சென்னிநின்
ஒவா வீகையி னுயிர்ப்பிடம் பெறுஅர்
களிறுகவர் முயற்சியிற் பெரிதுவருந் தினரே
உலகங் காவலர் பலர்விழித் திருப்ப
வறிது துயில்கோடல் வேண்டுநின்
பரிசின் மாக்களுந் துயில்கமா சிறிதே.

அரசனுக்குச் சென்றநாழிகைக்குச்சொன்ன கவி.

566. பூமென் கணையும் பொருசிலையுங் கைக்கொண்டு
காமன் றிரியுக் கருவூரா—யாமங்கள்
ஒன்றுபோ யொன்றுபோ யொன்றுபோய் நாழிகையும்
ஒன்றுபோ யொன்றுபோ யொன்று.

நாண்மங்கலம்.

[பறைசாற்றியது.]

567. ஏமாரு மன்னீ ரெயிறிறமி னெங்கோமான்
வாமான்றேர்க் கோதை சதயநா—ளாமாறு
காம நுகருமின் கண்படுமி னென்னுமே
ஏம முரசின் குரல்.

[வெள்ளணிநாட் சேருவோழிந்தது.]

568. கண்ணார் கதவந் திறமின் களிறொடுதேர்
பண்ணார் நடைப்புரவி பண்விடுமின்—நண்ணாதீர்
தேர்வேந்தன் றென்னன் றிருவுத் திராடநாட்
போர்வேந்தன் பூச லிலன்.

569. அந்தண ராவொடு பொன்பெற்றார் நாவலர்
மந்தரம்போன் மாண்ட களிறூர்ந்தார்—எந்தை
இலங்கிலைவேற் கிள்ளி யிரேவதிநா ளென்னோ
சிலம்பிதன் கூடிழந்த வாறு.

சிறைவிடுதல்.

570. செய்கை யரிய களவழிப்பா முன்செய்த
பொய்கை யொருவனுற் போந்தாமோ—சைய
மலைச்சிறைதீர் வாட்கண்டன் வெள்ளணிநாள் வாழ்த்திக்
கொலைச்சிறைதீர் வேந்தக் குழாம்.

(565) தொல். பொரு. 90 நச். (566) சிலப். 5, 49 அடி. (567) தொல். பொரு. 91 நச். (568, 569) ஷை ; முத்தொள்ளாயிரம். (570) தொல். பொரு. 91 நச்.

மண்ணுமங்கலம்.

571. அளிமுடியாக் கண்குடையா னுகுதிநாள் வேய்ந்த
ஒளிமுடி பொன்மலையே யொக்கும்—ஒளிமுடிமேன்
மந்திரத்தா லந்தணர் வாக்கியநீ ரம்மலைமே
லந்தரத்துக் கங்கை யனைத்து.

வாண்மங்கலம்.

572. ஆளி மதுகை யடல்வெய்யோன் வாள்பாடிக்
கூளிகள் வம்மினோ கூத்தாடக்—காளிக்குத்
தீராத வெம்பசி தீர்த்துநாஞ் செங்குருதி
நீராட்டி யுண்ட நிணம்.

573. அரும்பவிழ்தார்க் கோதை யரசெறிந்த [1]வொள்வாள்
பெரும்புலவுஞ் செஞ்சாந்து நாறிச்—சுரும்போடு
[2]வண்டாடும் பக்கமு முண்டு குறுநரி
கொண்டாடும் பக்கமு முண்டு.

குடைமங்கலம்.

574. மந்தரங் காம்பா மணிவிசும் போலையாத்
திங்க ளதற்கோர் திலதமா—வெங்கணு
முற்றுநீர் வைய முழுது நிழற்றுமே
கொற்றப்போர்க் கிள்ளி குடை.

575. அறநீர்மை தாங்கி யளப்பரிதாய் வானப்
புறநீர்போன் முற்றும் பொதியும்—பிறரொவ்வா
மூவேந்த ருள்ளு முதல்வேந்தன் முத்தமிழ்க்குக்
கோவேந்தன் கண்டன் குடை.

576. மனுப்புவிமேல் வாழ மறைவளர்க்கு மாரப்
பனித்தொடையற் பார்த்திவர்கோ னெங்கோன்—தனிக்கவிகை
தண்மை நிழற்றன்று தற்றொழுத பேதையர்க்கு
வெம்மை நிழற்றாய் மிகும்.

வேள்விநிலை.

577. பொன்னிறைந்த பொற்கோட்டுப் பொற்குளம்பிற் கற்றாதந்
தின்மகிழா னந்தணரை யின்புறுப்பர்—சென்னிதன்
மாவிலமே யானுலகம் போன்றது வான்றுகள்போர்த்
தானுலக மண்ணுலகா மன்று.

(571, 572) தொல், பொரு. 91 நச். (573, 574) ஷை; முத்தொள்ளாயிரம். [1]வென்வேல். [2]கொண்டாடும் பக்கமு முண்டு குறுநரி, யுண்டாடும் பக்கமு முண்டு. (576) வீரசோ, அலங், 29; தண்டி, 74 மேற். (577) தொல். பொரு. 90 நச்.

விளக்குநிலை.

578. மைம்மிசை யின்றி மணிவிளக்குப் போலோங்கிச்
செம்மையி னின்றிலங்குந் தீபிகை—தெம்முனையுள்
வேலினுங் கோடாது வேந்தன் மனைவிளங்கக்
கோலினுங் கோடா கொழுந்து.

வாயினிலை.

579. வேற்றுச் சுரத்தோடு வேந்தர்கண் வெம்மையும்
மாற்றற்கு வந்தனெம் வாயிலோய்—வேற்றூர்
இறைமயக்கு முற்றத்துச் சேணோங்கு கோயில்
இறைமகற்கெம் மாற்ற மிசை.

செவியறிவுறூஉ.

(மருட்பா)

580. பல்யானை மன்னர் முருங்க வமருழந்து
கொல்யானை தேரோடு கோட்டந்து நல்ல
தலைபாலங் கானம் பொலியத் தொலையாப்
படுகளம் பாடுபுக் காற்றிப் பகைஞர்
அடுகளம் வேட்டோன் மருக வடுதிற
[1]லாழி நிமிர்தோட் பெருவழுதி யெஞ்ஞான்றும்
ஈர முடையையா யென்வாய்ச்சொற் கேட்டி
உடைய வுழவரை நெஞ்சனுங்கக் கொண்டு
வருங்கா லுழவர்க்கு வேளாண்மை செய்யன்
மழவ ரிழைக்கும் [2]வரைகா ணிதியீட்டங்
காட்டு மமைச்சரை யாற்றத் தெளியல்
[3]அடைத்த வரும்பொரு ளாறன்றி வெளவல்
[4]ஈகைப் பெரும்பொரு ளாசையாற் சென்று
பெருங்குழிசி, மன்ற மறுக வகழாதி யென்றும்
மறப்புற மாக மதுரையா ரோம்பும்
அறப்புற மாசைப் படேற்க [5]வறத்தால்
அவையார் கொடுநாத் திருத்தி நவையாக
நட்டார் குழிசி சிதையாதி யொட்டார்
[6]செவிபுதைக்குந் தீய கடுஞ்சொற் கவிபடைத்தாய்

(578, 579) தொல். பொரு, 90 நச். (580) யாப். வி. 55; வீரசோ. பக். 189; யாப். கா. செய். 27 மேற். [1]லாளி. [2]குலநெறி யீட்டங்; வரைக்கா ணிதி யீட்டம்; [3]படைத்த். [4]இனத்தைப். [5]வரத்தால். [6]செவியிசைக்குந் தீய கடுஞ்சொ லுடைத்தாய்க்.

கற்றூர்க் கினனுகிக் கல்லார்க் கடிந்தொழுகிச்
செற்றூர்ச் செகுத்துநிற் சேர்ந்தாரை யாக்குதி
அற்ற மறிந்த வறிவினய் மற்றும்
இவையிவை [1]நீயா தொழுகி னிலையாப்
பொருகட லாடை நிலமகள்
ஒருகுடை நீழற் றுஞ்சுவண் மன்னே.

(செவியறிவுறூஉச் சமநிலைமருட்பா.)

581. இருமூன்றி லொன்றுகொண் டேதங் [2]கடிந்து
பெருநீர்மை யார்தொடர்ச்சி பேணி—யிருநிலங்
காப்பா யாகுமதி கடனென
மாப்பெருந் தானை மன்ன ரேறே.

புறநிலைவாழ்த்து.

582. தென்ற லிடைபோழ்ந்து தேனூர் நறுமுல்லை
முன்றின் முகைவிரியு முத்தநீர்த் தண்கோளூர்க்
குன்றமர்ந்த கொல்லேற்றூ னிற்காப்ப—என்றும்
தீரா நண்பிற் றேவர்
சீர்சால் செல்வமொடு பொலிமதி சிறந்தே.

(மதிவாணனூர்)

583. அந்தணர் வேள்வியோ டருமன்ற முற்றுக
வேந்தன் வேள்வியோ டியாண்டுபல வாழ்க
வாணிக ரிருநெறி நீணிதி தழைக்க
பதினெண் கூலமு முழவர்க்கு மிகுக
வாழ்க நெடுமுடி கூர்கவென் வாய்ச்சொலென.

பரிசில்கடாநிலை.

584. தென்குமரி வடவிமய
மாஅவெல்லைத் தம்புகழ்விளங்கக்
கடலன்ன படைநாப்பண்
மலையன்ன களிற்றெருத்தின்
ஞாயிற்றன்ன சேண்விளங்குதிறலர்
திங்களன்ன வெண்குடையுயரிய
ஒன்னுதார் மிடல்சாயத்
துன்னரிய வகழ்கடந்தவர்

---

[1] நீவாதொழுகிற் றுலையாப். (581,582) யாப்.வி. 55. [2] களைந்து. (583) சிலப். 6.36. (584) யாப். வி. 94.

பொன்னுடைய வெயின்முருக்கி
ஓவத் தன்ன வினைபுனை நல்லிற்
கோவத் தன்ன கனையெரி கவரச்
சென்றவர்திறன் மழுங்கவாற்றலிற்
புலவர்பல புகழ்கொண்டு
பெறலரிய விழுத்தாயம்
விறலியர்க்கு மகிழ்ந்துவீசினை
ஒன்னார் துப்பிற் றென்னவர் மருக
பல்கிளைப் பசிநோனாது
கல்பிறங்கிய சுரநீந்தி
இவண்வந்த நசைவாழ்நன்
எனவைத் தெல்லாம்பிறர்க்கும் ?
ஈந்ததெல்லாம் எனக்காகும் ?
பொருள்கொடுத்தும் புகழ்கொள்வனென
இவற்கீயே னெனக்கெவனென்ன
என்னேக்காது நின்னேக்கி
என்னை விடுமதி வென்வேல் வழுதி
வெயிற்கதிர் நுழையா வியன்பெருங் காவிற்
றண்புனல் வையை யொண்டுறைத் தொகுத்த
கோடுறு மணலினு மேத்திப்
பாடுதும் பெருமநின் னுடொறும் புகழ்ந்தே.

பாணாற்றுப்படை.

585. மேற்கோட்டுநீர் கீழ்ப்பரந்துதன்
[1]விழுக்கோட்டுமெய் வியல்விசும்புதோய்ந்
தோங்குமுன்னர்க் [2]காம்புகிழியப்
பாய்ந்துசென் றுசென் ருங்குநலிபுகின்
றெதிர்த்துமீண்டாங் கதிர்த்துக்கரைகொன்
நலங்குகோட்டுமுத் திலங்குநிலவுச்செய்
தூர்திரைக் காவிரி பரக்குந் தண்டலை
மூதா ரோனே பேரிசை வளவன்
சுரம்படர்ந்து வருந்துவ தெவனோ
நிரம்பா வாழ்க்கைப் பாணர் கடும்பே.

(585) தொல். செய். 20. பேரா; நச். [1]விழுக்கோட்டுமேல். [2]காம்புகழியப்.

இயன்மொழி.

(கொடைச்சிறப்பு)

586. வையம் புரக்குமான் மன்னவநின் கைக்காரும்
பொய்யின்றி வானிற் பொழிகாரும்—கையா
மிருகார்க்கு மில்லைப் பருவ மிடிக்கும்
ஒருகார் பருவ முடைத்து.

587. சேர்ந்த புறவி னிறைதன் றிருமேனி
ஈர்ந்திட் டுயர்துலைதா னேறினன்—நேர்ந்த
கொடைவீர மோமெய்ந் நிறைகுறையா வன்கட்
படைவீர [1]மோசென்னி பண்பு.

588. முத்தரும்பிச் செம்பொன் முறிதழைந்து பைந்துகிரின்
தொத்தலர்ந்து பல்கலனுஞ் சூழ்ந்தொளிரும்—கொத்தினதாம்
பொன்னேர் மணிகொழிக்கும் பூங்கா விரிநாடன்
தன்னேர் பொழியுந் தரு.

589. உள்ளிய வுள்ளியாங் கீயு முயர்விற்றூங்
கள்ளவிழ் பூஞ்சோலைக் கற்பகமும்—வள்ளல்
வளைபாய் புனனாடன் மானவே ளின்றும்
உளவாக வாடா துலகு.

(புகழ்)

590. மடங்கா மயிலூர்தி மைந்தனை நாளுங்
கடம்பம்பூக் கொண்டேத்தி யற்றாற்—றொடங்கமருள்
நின்றிலங்கு வென்றி நிறைகதிர்வேன் மாறனை
யின்றமிழால் யாம்பாடும் பாட்டு.

591. செங்க ணெடியான்மேற் றேர்விசய னேற்றியபூப்
பைங்கண்வெள் ளேற்றான்பாற் கண்டற்றால்—லெங்கு
முடிமன்னர் சூடியபூ மொய்ம்மலர்த்தார் மாறன்
அடிமிசையே காணப் படும்.

592. கூந்தன்மா கொன்று குடமாடிக் கோவலனாய்ப்
பூந்தொடியைப் புல்லிய ஞான்றுண்டால்—யாங்கொளித்தாய்
தென்னவனே தேர்வேந்தே தேறுநீர்க் கூடலார்
மன்னவனே மார்பின் மறு.

---

(586) வீரசோ. அலங். 19 மேற்; தண்டி. 36 மேற். (587-588) வீரசோ. அலங். 28 மேற்; தண்டி. 69 மேற். (589) வீரசோ. அலங். 12 மேற். (590-592) முத்தொள்ளாயிரம்.

593. வானிற்கு வையகம் போன்றது வானத்து
மீனிற் கனையார் மறமன்னர்—வானத்து
மீன்சேர் மதியனையன் விண்ணுயர் கொல்லியர்
கோன்சேரன் கோதையென் பான்.

594. பார்படுவ செம்பொன் பதிபடுவ முத்தமிழ்நூல்
நீர்படுவ வெண்சங்கு நித்திலமுஞ்—சாரன்
மலைபடுவ யானை வயமாறன் கூர்வேற்
றலைபடுவ தார்வேந்தர் மார்பு.

595. அருமணி யைந்தலை யாடரவம் வானத்
திருமேற்றை யஞ்சி யொளிக்கும்—செருமிகுதோட்
செங்கண்மா மாறன் சினவேல் கனவுமே
அங்கண்மா ஞாலத் தரசு.

(வெட்சியும் வாகையும் வந்த பாடாண்)

596. முனைப்புலத்துக் கலிதுடை முன்னரைப்போல் வேந்தூர்
முனைப்புலம்பு முன்னிரையும் வீசி—யெனைப்புலத்துஞ்
சென்றது நின்சீர்த்தி தேர்வளவ தெவ்வர்போல்
நன்று முண்டாக நமக்கு.

(கடவுண் மானிடப்பெண்டிரை நயந்தது)

597. குடுமிப் பருவத்தே கோதை புனைந்த
[1]இடுமுத்தப் பூத னிருப்பப்—படுமுத்தம்
புன்னை யரும்பும் புகாஅர்ப் [2]புறம்பணையாய்க்
கென்ன முறைய ளிவள்.

தெய்வப்பாடாண்.

(கடவுண்மாட்டு மானிடப்பெண்டிர் நயந்தது.)

598. வெண்பலிச் சாந்த முழுமெய்யு மேற்பூசி
உண்பலிக் கூரூர் திரிவது மேலிட்டுக்
கண்பலிக் கென்று புகுந்த கபாலிமுன்
எண்பலித் தாளிவள் யாதவாய் வாளே.

(திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்பேரில்)

599. வருக்கைநறுங் கனிசிதறிச் செந்தேன் பொங்கி
மடுக்கரையிற் குளக்கரையின் மதகி லோடப்
பெருக்கெடுத்து வண்டோலஞ் செய்யுங் காழிப்
பிள்ளையார் சம்பந்தப் பெருமான் கேளீர்

(593–595) முத்தொள்ளாயிரம். (596) தொல். பொரு. 80. (597) ஷை. செய். 149 பேரா. [1]இடுமுத்தம், நெடுமுத்தம். [2]புறம்பணையார்க். (598) ஷை. ஷை., 80 பேரா; நச். (599) தனிப்பா,

அருட்குலவு மயிலைதனி லனலால் வெந்த
அங்கத்தைப் பூம்பாவை யாக்கி னேமென்
றிருக்குமது தகவன்று நிலவால் வெந்த
இவளையுமோர் பெண்ணாக்க லியல்பு தானே.

(திருமங்கையாழ்வார்பேரில்.)

600. கடியுண்ட நெடுவாளை காவிற் றப்பிக்
கயத்துக்கு ளடங்காமல் விசும்பிற் பாய
அடியுண்ட வுயர்தெங்கின் பழத்தாற் பூகம்
அலையுண்டு குலைசிதறு மாலி நாடா
படியுண்ட பெருமானைப் பறித்துப் பாடிப்
பதம்பெற்ற பெருமானே தமியேன் பெற்ற
கொடியொன்று நின்பவனிக் கெதிரே சென்று
கும்பிட்டா ளுயிரொன்றுங் கொடுவந் தாளே.

புலவிபொருளாகத்தோற்றிய பாடாண்.
(பாண்டியன்மனைவி)

601. வேண்டியபோ தின்பம் விளைக்கு மடந்தையரைத்
தீண்டியகை யாலென்னைத் தீண்டாதே—பாண்டியா
முல்லைக் கதிபா முகம்பார்த் தகலநின்று
சொல்லக் கடவவெலாஞ் சொல்.

கைக்கிளை.

சேரன்.

602. காமன்கா ணென்று கருவூரார் பாராட்டத்
தாமந்தாழ் கோதை வருவானை—யாமும்
இருகுடங்கை யானெதிரே கூப்பித் தொழக்கண்
டொருகுடங்கை யாயின கண்.

603. தாய ரடைப்ப மகளிர் திறந்திடத்
தேயத் திரிந்த குடுமியவே—யாய்மலர்
வண்டுலாங் கண்ணி வயமான்றேர்க் கோதையைக்
கண்டுலாம் வீதிக் கதவு.

604. காப்படங்கென் றன்னை கடிமனை யிற்செறித்
தியாப்படங்க வோடி யடைத்தபின்—மாக்கடுங்கோன்
நன்னலங் காணக் கதவந் துளைதொட்டார்க்
கென்னைகொல் கைம்மா றினி.

(600, 601) தனிப்பா. (602) தொல். செய். 19 பேரா; நச். (603, 604) முத்தொள்ளாயிரம்.